# கோபுரம்

தகவல் இதழ்

நந்தன வருடம்

வைகாசி 2012




புத்தசாசனம், மற்றும் மத அலுவல்கள் அமைச்சு

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கோபுரம்

## தகவல் இதழ்

## 'நந்தன' வருடம் – வைகாசி 2012

மலர்: 21 இதழ்: 01

வெளியீடு – ஆய்வுப் பிரிவு

**இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்**

மலர்க்குழு

**திருமதி. சாந்தி நாவுக்கரசன்**
பணிப்பாளர்

**திரு. ம.சண்முகநாதன்**
உதவிப்பணிப்பாளர்

**செல்வி. ச.நந்தினி**
ஆராய்ச்சி அலுவலர்

இல. 248 1/1, காலி வீதி, கொழும்பு – 04

தொலைபேசி இல. : 2552641 / 2552643

தொலைநகல்: 2552825, மின்னஞ்சல் :hindudir@yahoo.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்!

மனம் என்பது ஒரு மாபெரும் ஏரியாகும். அதில் தேக்கி வைத்திருக்கும் ''திடம்''என்னும் நீரின் அளவைக் கொண்டுதான் ''செய்திறன்'' என்ற சக்தி பிறக்கின்றது. அவ்வேரியில் எவ்வளவு நீர் தங்கியிருக்கிறதோ அதற்கேற்பவே சக்தி பிறக்கும்.

நாம் எடுத்த காரியத்தை முடிக்கும் வேளையில், ஆங்காங்கு சில சிரமங்கள் ஏற்படலாம். அவை நம்மைத் தடுக்க வந்த முட்டுக்கட்டைகள் என்றெண்ணாமல், தட்டிக் கொடுத்து ஊக்கமளிக்கும் உபகரணங்களாகக் கொள்ளுங்கள். அவை மனம் எனும் சக்தியைத் தீட்டிக் கூர்மைப்படுத்தும் சாணைக் கற்களென நம்புங்கள்.

நம்மில் சிலர் சிறிய எதிர்பார்ப்புகள் நடைபெறாவிட்டாலும் மனமுடைந்து போவதுண்டு. சின்ன விடயமும் நம்மை நிம்மதியில்லாமல் செய்துவிடும். இதன் காரணம் நம் மனதில் ''திடம்'' இல்லாமையே. இதிலிருந்து விடுபடுவதற்கு நாம் நமது அறிவைப் பெருக்கிக் கொள்வது அவசியமாகும். அறிவைப் பெருக்கிக் கொள்வதற்கு ஆன்றோர் வாக்குகள், நல்ல அறிவு தரும் நூல்கள், பெரியோரின் வரலாறுகள் என்பனவற்றைப் படிக்க வேண்டும். அறிவு பெருகுவதால் நமது ஆற்றல் அதிகரிப்பதுடன் நம்மிடமுள்ள குறைகளையும் உணர்ந்து கொள்ள முடியும்.

அறிவைப் பெருக்கி எப்பொழுதும் நாம் இளமையுள்ளம் கொண்டிருந்தால் வாழ்க்கையில் குறுக்கிடும் அபாயங்களையும் அவலங்களையும் வெகு எளிதில் தூக்கி எறிந்துவிட்டு முன்னேறிச் செல்லலாம். அதன் பின் வாழ்க்கையில் வெற்றிக்கும் இன்பத்திற்கும் எப்பொழுதும் குறையிருக்காது. நம் இலட்சியத்தையும் நோக்கையும் எளிதில் அடையலாம்.

**'கோபுரம்' இதழ் தொடர்பான வாசகர் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன!**

**அட்டைப்படம்:**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திணைக்களச் செய்திகள்

## தைப்பொங்கல் விழா

ஜனாதிபதி செயலகம், புத்த சாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சு, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் மாண்பு மிகு ஜனாதிபதி அவர்களின் தலைமையில் தை மாதம் 16 ஆம் திகதி திங்கட்கிழமையன்று அலரி மாளிகையில் தேசிய தைப்பொங்கல் விழா நடைபெற்றது.

இவ்விழாவிற்கு இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் திரு.எஸ்.எம்.கிருஷ்ணா அவர்கள் சிறப்பு அதிதியாகக் கலந்துகொண்டார். பிரதம மந்திரி கௌரவ தி.மு.ஜயரட்ண, இந்திய உயர்ஸ்தானிகர் மேதகு அஷோக் கே.காந்தா, கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி சர்வரூபானந்தா, பாராளுமன்ற உறுப்பினர்கள், புத்த சாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சின் செயலாளர் திரு.கெசின் ஹேரத், மேலதிகச் செயலாளர், திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி. சாந்தி நாவுக்கரசன் மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

இப்பொங்கல் விழாவில் திரு.ரவிசங்கர் குழுவினரின் நாதஸ்வர இசையும் கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி மாணவிகளின் நடனக் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை திணைக்களத்தின் அனுசரணையுடன் பல மாவட்டங்களிலும் தைப்பொங்கல் விழாக்கள் நடைபெற்றன.

### மட்டக்களப்பு

மட்டக்களப்பு மாவட்டச் செயலகம், சமுர்த்தி அதிகார சபை, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் என்பன இணைந்து மட்டக்களப்பு மாவட்டத்தின் களுதாவளை ஸ்ரீ சுயம்புலிங்க பிள்ளையார் ஆலயத்தில் 22.01.2012 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பொங்கல் விழாவை நடத்தின.

இவ்விழாவிற்கு மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் திருமதி. ஹேமலோஜினி குமரன் மற்றும் பலர் கலந்துகொண்டார்கள். பல கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இவ்விழாவினை திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி உதவியாளர் திருமதி சி.செல்வமலர் அவர்கள் ஒழுங்கு செய்து நடத்தினார்.

### வவுனியா

வவுனியா மாவட்டப் பொங்கல் விழா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் 23/01/2012 ஆம் திகதி திங்கட்கிழமையன்று திணைக்களத்தின் வவுனியா மாவட்ட அபிவிருத்தி உதவியாளர் செல்வி. கி.கலையமுதா அவர்களின் ஏற்பாட்டில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு வவுனியா மாவட்டத்தின் மேலதிக அரசாங்க அதிபர் திரு.ந.திருஞானசம்பந்தர் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார். கலாநிதி தமிழ் மணி அகளங்கன் அவர்களின் சிறப்புச் சொற்பொழிவும் அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் விளையாட்டுப் போட்டிகளும் அன்று இடம்பெற்றன.

### திருகோணமலை

திணைக்களத்தின் திருகோணமலை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் திரு. எஸ்.மகேந்திரராசா அவர்களின் ஏற்பாட்டில் திருகோணமலை, அன்பு வழிபுரம் கலைமகள் வித்தியாலயத்தில் பொங்கல் விழா சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவிற்கு திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் என். அருள்ராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

*புகழ்ச்சியும் இகழ்ச்சியும் காற்றினில் அசைவுகள், அவைகளைத் தாண்டி அப்பாற் செல்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அம்பாறை

திணைக்களமும் அம்பாறை மாவட்ட ஆலையடி வேம்பு பிரதேச இந்து மாமன்றமும் இணைந்து மன்ற வளாகத்தில் தை மாதம் 21 ஆம் திகதி சனிக்கிழமை பொங்கல் விழாவைக் கொண்டாடின.

திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் திருமதி. ஹேமலோஜினி குமரன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் சொற்பொழிவு களும் இடம்பெற்றன.

### யாழ்ப்பாணம்

திணைக்களத்தின் யாழ்ப்பாண மாவட்ட அபி விருத்தி உதவியாளர் திருமதி.மா.அனந்தலெட்சுமி அவர்களால் பண்டாக் குளம் பிள்ளையார் ஆலயத் தில் மருதவளவு விநாயகர் அறநெறிப் பாடசாலை யுடன் இணைந்து 21/01/2012 ஆம் திகதி சனிக் கிழமை பொங்கல் விழா சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்விற்கு பிரமத அதிதிகளாக திரு.கே.வி.குண சேகரம் அவர்களும் சிறப்பு விருந்தினரான பிரம் மஸ்ரீ எஸ்.எம்.சர்மா அவர்களும் வருகை தந்தார்கள். இவ்விழாவில் சைவப்புலவர் கந்த சத்திய தாசன் அவர்களின் ஆன்மீக சொற்பொழிவும் கலை நிகழ்வு களும் இடம்பெற்றன.

## மகாத்மா காந்தியின் வாழ்வில்!

ஒருமுறை-பாட்னாவுக்கு ரயிலில் பயணம் செய்து கொண்டிருந்தோம். திடீரென்று பாபுஜிக்கு ஒரு சந்தேகம். ''நமக்கு டிக்கெட்டுகள் வாங்கி விட்டார்களா?'' என்று கேட்டார்.

பயணச்சீட்டு வாங்கப்படாதது அப்போதுதான் எனக்கு உறைத்தது! வழக்கமாக, எந்த இடத்தில் தங் கிச் செல்கிறோமா - அந்த வீட்டுக்காரர்கள் முன்னேற்பாடாக எங்களுக்கு டிக்கெட் எடுத்துவிடுவார்கள். எப்போதுமே மூன்றாம் வகுப்புப் பயணம்தானே! இந்த முறை எங்களை உபசரித்து வழி அனுப்பியவர் கள், டிக்கெட் எடுக்கவில்லை.

''அடுத்த ஸ்டேஷனில், ரயில் நிற்கும் போது-ஸ்டேஷன் மாஸ்டரைக் கூப்பிடு!'' - என்றார் பாபு.

அடுத்த ஸ்டேஷனில் ரயில் நின்றது. காந்திஜியை, நன்றாகப் பார்க்க வேண்டும் என்ற ஆவலில், கூட் டத்தில் எக்கி, எக்கி நின்று கொண்டிருந்த ஸ்டேஷன் மாஸ்டரைக் கூப்பிட்டேன்!

''பாபுஜியா? என்னைப் பார்க்க விரும்புகிறாரா?'' - என்று அவருக்குச் சொல்லில் அடங்காத சந்தோஷம்! தூரத்தில் நின்று- பார்க்க முடியுமா? -எனக் காத்திருந்தோம். இப்போது அவரே கூப்பிட்டிருக் கிறார். கிட்டத்தில் இருந்து பார்க்கப் போகிறோம். கிட்டத்தில் இருந்து பேசப் போகிறோம்- என்று ஸ்டேஷன் மாஸ்டர் மனம் கும்மாளமிட்டது!

பாபுஜியைக் கம்பார்ட்மெண்ட்டில் வந்து பார்த்தார்.

''டிக்கெட் வாங்க மறந்துவிட்டோம்! ரசீது எழுதிக்கொடுத்துப் பணம் வாங்கிக் கொள்ளுங்கள்!'' -என் றார் பாபு.

''தேசப் பிதாவிடம் டிக்கெட்டுக்குப் பணம் வாங்குவதா?'' - என்று மறுத்தார்.

''தேசத் தலைவர்கள் எல்லாம் ஓசிப் பயணம் செய்தால் ரயில்வே துறைக்கு எத்தனை நஷ்டம்? நீ ங்கள் பணம் வாங்க மறுத்தால் - மேலிடத்தில் புகார் செய்வேன்!'' - என்று பொய்க்கோபம் காட்டினார் காந்திஜி.

வேறு வழியின்றி, ஸ்டேஷன் மாஸ்டர், பணம் பெற்றுக்கொண்டு ரசீது போட்டுக் கொடுத்தார்.

**(மகாத்மாவின் அந்தரங்க உதவியாளராகக் கடமைபுரிந்த வி.கல்யாணம் என்பவரின் குறிப்பு)**

**- ஆதாரம் கலைமகள் - 2011**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகா சிவராத்திரி விழா

திணைக்களத்தினால் மகா சிவராத்திரி விழா ஆண்டுதோறும் ஒரு மாவட்டத்தில் மிகப்பெரிய அளவில் நடத்தப்பட்டு வருகின்றது. அந்த வகையில் இவ் ஆண்டின் மகா சிவராத்திரி விழாவை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் கொழும்பு கொச்சிக்கடை ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலய பரிபாலன சபையும் இணைந்து வெகு சிறப்பாக நடத்தின.

இவ்விழாவில் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி. சாந்தி நாவுக்கரசன், உதவிப் பணிப்பாளர் திரு. ம.சண்முகநாதன் மற்றும் பல முக்கிய பிரமுகர்களும் கலந்துகொண்டார்கள். பெப்ரவரி 20, 21 ஆம் திகதிகளில் விசேட பூசைகளுடன் பல கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. அருள்மொழியரசி வித்துவான் திருமதி. வசந்தா வைத்தியநாதன், திருமதி. சத்யா சுரேஷ் ஆகியோரின் சிறப்புச் சொற்பொழிவுகளும் பிரபல தென்னிந்தியப் பாடகர் ரி.எம்.சௌந்தரராஜனின் மகன் தேனிசைத் திலகம் ரி.எம்.எஸ்.செல்வகுமார் அவர்களின் ''ஆனந்தராகம்'' பக்தி இன்னிசையும் சிறப்பாக நடைபெற்றன.

மேலும், கொட்டாஞ்சேனை, ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலய அறநெறிப்பாடசாலை மாணவர்கள், ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய அறநெறிப் பாடசாலை மாணவர்கள், ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலய இந்து சமயப் பாடசாலை மாணவர்கள், முகத்துவாரம் சிவசக்தி நர்த்தனஷேத்ரா மாணவர்கள் ஆகியோரின் குழு நடனங்களும், அபிநயஷேத்ரா நடனப்பள்ளி இயக்குனர் கலா வித்தகர் செல்வி. திவ்யா சிவனேசன் அவர்களின் தனி நடனமும், கொழும்பு திருவாவடுதுறை ஆதீன சைவத்திருமுறை பயிற்சி நிலைய உறுப்பினர்களின் சிவபுராணம் திருமுறை பாராயணமும்; ஸ்ரீ பொன்னம்பல தேவஸ்தான இந்து சமயப் பாடசாலை மாணவர்களின் வில்லுப்பாட்டும்; பூர்ணம் பவுண்டேஷன் செல்வி அம்மா குழுவினரின் பஜனையும்; திருமதி. சரோஜினி பாஸ்கரன் அவர்களின் கர்நாடக இசையும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை, பல்வேறு மாவட்டங்களின் ஆலயங்களிலும் திணைக்கள அனுசரணையோடு மகா சிவராத்திரி பூசைகள் சிறப்பாக நடைபெற்றன.

# பிறரைப் பழித்துப் பேசாதீர்!

உங்களை நீங்கள் எவ்வளவு நேசிக்கிறீர்களோ, அதே அளவிற்கு பிறர் மீதும் நேசம் காட்டுங்கள். அவர்கள் உங்களைவிட எந்த விதத்திலும் குறைந்தவர்கள் அல்ல என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். எக்காரணம் கொண்டும், பிறரை இழிவாகப் பேசுதலும் வீண்பழி சுமத்துதலும் கூடாது. இத்தகைய செயல்களால் வீண் பகை வளருமே தவிர, பெயருக்குக் கூட நன்மை உண்டாகாது. மேலும் இத்தகைய குணமுடையவர்களிடம் பாசம், பரிதாபம், இரக்கம், கருணை என எத்தகைய நற்பண்புகளும் இருக்காது.

மனிதர்களுக்கு ஏற்படும் துன்பமானது, வெளியில் எங்கிருந்தோ வருவதில்லை. அவரவர் நடந்து கொள்ளும் விதத்திற்கேற்ப அவர்களுக்கு திரும்பக் கிடைக்கிறது. பிறரைப் பழிப்பதாலும் நமக்கு துன்பம் வரும். ஆகவே, பழிச்சொல்லை விட்டு, அனைவரிடமும் பரிவுடன் நடந்துகொள்ள வேண்டும். அத்தகையவர்களே இறைவனால் விரும்பப்படுவர்.

சிலர் மற்றவர்களைப் பற்றி குற்றம் சொல்லுவதையே வழக்கமாகக் கொண்டிருப்பர். பிறர் செய்யும் நல்ல செயல்களைக் கூட மாற்றித் திரித்து பேசுவர். இப்படி செய்யவே கூடாது. அடுத்தவர்களைக் குற்றம் சொல்லிக் கொண்டிருப்பவர்களிடம் யாரும் நெருங்க மாட்டார்கள். ஒரு கட்டத்தில் அவர் தன் சுற்றத்தார் அனைவரையும் இழந்து தனித்து நிற்க வேண்டிய சூழ்நிலைதான் வரும். இறுதிவரையில் அவருடன் சொந்தம், உறவு என யாரும் இல்லாமலேயே போய்விடுவர்.

ஆகவே, ஒருவர் எத்தகைய செயல் செய்தாலும் அதை விமர்சனம் செய்து பேசாதீர்கள்.

- ஔவையார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் 64ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு விசேட பூஜை

இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் 64 ஆவது சுதந்திரதினத்தை முன்னிட்டு பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி சனிக்கிழமையன்று அநுராதபுரம் ஸ்ரீ கதிரேசன் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடு நடைபெற்றது. இதில் பாரம்பரிய உற்பத்தி மற்றும் சிறுகைத்தொழில் அமைச்சர் மாண்புமிகு கே.எம்.டக்ளஸ் தேவானந்தா, யாழ்ப் பாண பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ எம்.சந்திரகுமார் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகக் கலந்துகொண்டனர். திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி. சாந்தி நாவுக்கரசன் மற்றும் பல உத்தியோகத்தர்களும் இப்பூஜை நிகழ் விற் கலந்துகொண்டார்கள்.

# "தேசத்திற்கு மகுடம்" கண்காட்சி

இலங்கையின் சுதந்திர தினத்தன்று வெவ்வேறு மாவட்டங்களில் "தேசத்திற்கு மகுடம்" என்னும் கண்காட்சி ஒழுங்கு செய்யப்படுகின்றது. அதில் அமைச்சுகள், திணைக்களங்கள், தனியார் நிறுவனங்கள் என்பன பங்கு கொள்கின்றன.

இந்த ஆண்டு 'தேசத்திற்கு மகுடம்' கண்காட்சி, அநுராதபுரம் மாவட்டத்தின் ஒயாமடுலை என்னும் பிரதேசத் தில் பெப்ரவரி 04 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை இடம்பெற்றது. இதனை அதிமேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் கோலாகலமாக ஆரம்பித்து வைத்தார்.

அமைச்சுகள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் என்பவற்றின் செயற்பாடுகளை விளக்கும் வகையிலான காட்சிப் பொருட்கள், இக்காட்சியில் இடம்பெறுகின்றன.

இக்கண்காட்சியில் திணைக்களத்தின் செயற்பாடுகள் பற்றிய விபரங்கள் திணைக்கள வெளியீடுகள், பூசைப் பொருட்கள் என்பன காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

# திணைக்களத்தின் மூலம் "நந்தன" புதுவருடப் பஞ்சாங்கம் வெளியீடு

2012 ஏப்ரல் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிறந்த "நந்தன" தமிழ் புதுவருடப் பிறப்பை முன்னிட்டு, இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் கையடக்கப் பஞ்சாங்கம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

இப் பஞ்சாங்கத்தில் புதுவருடப் பிறப்புத் தொடர்பான சுபநேரங்கள், புதுவருடப் பலன்கள், மாத ரீதி யான சுபநேர விபரங்கள், இந்துக்களின் விரதங்கள், இலங்கையில் உள்ள பிரதான ஆலயங்களின் வருடாந்த விழாக்கள் போன்ற பல அம்சங்கள் அடங்கியுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திணைக்கள அனுசரணையில் மாவட்டங்களில் மகாசிவராத்திரி பூஜைகள்

## அம்பாறை

திணைக்களத்தின் அம்பாறை மாவட்ட அபிவிருத்தி உதவியாளர் திரு.கி.குணநாயகம் அவர்களின் ஏற்பாட்டில் சம்மாந்துறை ஸ்ரீ சிந்தா யாத்திரைப் பிள்ளையார் ஆலயத்தில் பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி மகா சிவராத்திரி விழா சிறப்பாக நடைபெற்றது. இதில் சமயச் சொற்பொழிகளும் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன.

## மட்டக்களப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் மகா சிவராத்திரி விழாவை மாவட்ட அபிவிருத்தி உதவியாளர்களான திருமதி. சி.செல்வகுமார், திருமதி. ப.எழில்வாணி ஆகியோர் பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி செட்டிப் பாளையம் சிவன் ஆலயத்திலும், களுவாஞ்சிக்குடி பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்திலும் சிறப்பாகக் கொண்டாடினார்கள். இதில் ஆன்மீகச் சொற்பொழிவுகளும் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

பொருள்களைத் தேடிப் போவதால் வாழ்க்கைத் தரம் உயர்ந்துவிடாது. உண்மையில் வாழ்க்கைத் தரம் என்பது வெளி வஸ்துக்களின் பெருக்கத்தில் இல்லை. தரமான வாழ்க்கையில் மனநிறைவோடு இருப்பது தான்.

குடும்பக் கடமைகளை விட்டுவிட்டு சமூகப் பணிக்கு செல்ல வேண்டியதில்லை. அதையும் விடாமலே, இதுவும் கடமை என்ற உணர்வோடு சேர்த்துச் செய்ய வேண்டும்.

நாம் 'நினை' என்றால் தான் மனம் அதைப் பற்றி நினைக்க வேண்டும். 'நினைக்காதே' என்றால் நினைக்காமல் இருக்க வேண்டும். இந்தத் தேர்வில் வென்றால் தான் மனம் நமது கட்டுப்பாட்டில் உள்ளதாக அர்த்தம்.

- ஔவையார்

## யாழ்ப்பாணம்

யாழ்.மாவட்ட அபிவிருத்தி உதவியாளர் திருமதி. மா.அனந்தலெட்சுமி அவர்களின் ஏற்பாட்டில் 20/2/2012 ஆம் திகதி நல்லூர் சட்ட நாதர் சிவன் ஆலயத்தில் மகா சிவராத்திரி விழா சமயச் சொற்பொழிவுகள், கலை நிகழ்வுகளோடு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.



இறை வழிபாட்டுக்கு தனியாக நேரம் ஒதுக்க வேண்டும். கடமையின் சுமை எவ்வளவு அழுத்தினாலும் இறைவழிபாட்டைத் தவறாமல் ஒழுங்காகச் செய்ய வேண்டும்.

இறைவனின் செயல்படி அனைத்தும் நடந்தாலும் நம்முடைய வேலையை நாம் தான் செய்தாக வேண்டும். காரணம், இறைவனின் திருவுளம் மனிதனின் செயல் மூலமே வெளிப்படுகிறது.

இறைவன் அனைவருக்கும் உரியவர். இறை நாமத்தைக் கணக்கிட்டு ஜபித்து அதன் மூலம் புனிதம் அடைவதற்காகவே இறைவன் நமக்கு விரல்களைத் தந்துள்ளான்.

கடவுள் நமக்கு மிகவும் நெருங்கிய உறவுக்காரர். இந்த உறவு எவ்வளவு ஆழமாக ஒருவனுக்கு இறைவனிடம் இருக்கிறதோ, அவ்வளவு தூரம் அவன் அவரை நெருங்குகிறான்.

- அன்னை சாரதாதேவியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு சீருடைகள், இசைக்கருவிகள் விநியோகம்

திணைக்களத்தினால் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு சீருடைத் துணிகளும் பண்ணிசை பயில்வதற்கு சுருதி, தாளம் ஆகிய இசைக் கருவிகளும் வழங்கப்பட்டு வருகின்றன. கடந்த 21/01/2012 ஆம் திகதி மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த அறநெறிப் பாடசாலைகளுக்கு நாவற்குடா இந்து கலாசார நிலையத்தில் சீருடைகள், இசைக்கருவிகள் என்பன விநியோகிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் திணைக்களத்தின் அறநெறிப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் திருமதி. ஹேமலோஜினி குமரன், மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி உதவியாளர்கள் திருமதி. சி.செல்வமலர், திருமதி. ப.எழில்வாணி, அம்பாறை மாவட்ட அபிவிருத்தி உதவியாளர் திரு. கே.குணநாயகம், முகாமைத்துவ உதவியாளர் திரு. கோபிநாத் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# நாட்டின் சுபீட்சத்திற்கான விசேட பூஜை

எமது நாட்டில் அமைதியும் சமாதானமும் நிலவி அனைத்து மக்களும் மகிழ்ச்சியோடும் மன நிறைவோடும் வாழவேண்டும் என்ற நோக்குடன் இந்து சமய ஆலயங்கள் அனைத்திலும் விசேட பூஜை வழிபாடுகளை மேற்கொள்ளுமாறு திணைக்களம் ஆலய பரிபாலன சபையினரை வேண்டிக்கொண்டது.

இவ்வேண்டுகோளுக்கு அமைய நாட்டின் அனைத்துப் பிரதேசங்களையும் சேர்ந்த இந்து ஆலயங்களில் மார்ச் மாதம் 13ஆம் திகதி காலை 7.00 மணிக்கு இலங்கைத் திருநாட்டின் எதிர்கால சுபீட்சம், செளபாக்கியம் என்பவற்றுக்கான விசேட பூஜை வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

கொழும்பு ஜிந்துப்பிட்டி சிவசுப்பிரமணியர் ஆலயத்தில் நடைபெற்ற விசேட பூஜையின்போது புத்தசாசனம் மத அலுவல்கள் பிரதி அமைச்சர் கௌரவ எம்.கே.ஏ.டி.எஸ்.குணவர்த்தன, திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் ஆகியோர் உட்பட பல பிரமுகர்கள் கலந்துகொண்டனர். தொடர்ந்து வத்தளை ஹேகித்த ஸ்ரீ சுப்பிரமணிய ஆலயம், ஹுணுப்பிட்டி ஸ்ரீ முத்துக்குமரன் ஆலயம் என்பவற்றில் நடைபெற்ற விசேட பூஜைகளிலும் திணைக்களப் பணிப்பாளர், உதவிப்பணிப்பாளர் கொழும்பு மாவட்ட கலாசார உத்தியோகத்தர் திருமதி நிர்மலா ஆகியோர் கலந்துகொண்டனர்.

மாவட்டங்களில் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட பூஜைகளின்போது மாவட்ட அபிவிருத்தி உதவியாளர்கள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறநெறிப் பாடசாலைகளின் தளபாடக் கொள்வனவுக்கான நிதியுதவி

திணைக்களத்தினால் அறநெறிப் பாடசாலைகளுக்கு தளபாட கொள்வனவிற்கென நிதியுதவி வழங்கப்பட்டு வருகின்றது. 2011 ஆம் ஆண்டின் நிதி ஒதுக்கீட்டிற்கமைய கொழும்பு, கம்பஹா, குருநாகல், புத்தளம், கண்டி, மாத்தளை, இரத்தினபுரி, காலி, கேகாலை, மாத்தளை, களுத்துறை, நுவரெலியா, பதுளை ஆகிய மாவட்டங்களில் இருந்து 59 அறநெறிப் பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு தலா முப்பதாயிரம் ரூபா வீதம் காசோலைகளாக வழங்கப்பட்டன. இந்நிகழ்வு 01/02/2012 ஆம் திகதி திணைக்களக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

## நிதியுதவி பெற்ற அறநெறிப் பாடசாலைகளின் விபரம்:

### பதுளை

1. வள்ளுவர் அறநெறிப் பாடசாலை, க்ளான் அல்பின்
2. காயத்திரி அறநெறிப் பாடசாலை, ஹாலிஎல
3. கலைமகள் அறநெறிப் பாடசாலை, தங்கமலை
4. விபுலானாந்தா அறநெறிப் பாடசாலை, ஹொப்டன்
5. கலைமகள் அறநெறிப் பாடசாலை, ஹப்புத்தளை
6. இந்துமதி அறநெறிப் பாடசாலை, நாரல்கலை தோட்டம்
7. ஐங்கரன் அறநெறிப் பாடசாலை, புதுமலை, ஹாலிஎல
8. அன்னை ஸ்ரீ சாரதா தேவி அறநெறிப் பாடசாலை, ஹொப்டன்
9. ஸ்ரீ கதிரேசன் அறநெறிப் பாடசாலை, நெதிர்வில், தெமோதர
10. ஸ்ரீ சித்திர விநாயகர் அறநெறிப் பாடசாலை, வெவச தோட்டம்

### திருகோணமலை

1. பேராறு பரமேஸ்வரா தமிழ் மகா வித்தியாலய அறநெறிப் பாடசாலை, கந்தளாய்

### இரத்தினபுரி

1. இந்து மாமன்றம் அறநெறிப் பாடசாலை, இறக்குவானை
2. வேதவியாசர் அறநெறிப் பாடசாலை, வரக்கா வீதி
3. ஆதிசங்கர் அறநெறிப் பாடசாலை, பண்ணைத் தோட்டம்
4. விவேகானந்தா அறநெறிப் பாடசாலை, கத்தகெத்த, திவுருப்பிட்டிய தோட்டம்
5. கலைமகள் அறநெறிப் பாடசாலை, எகலியகொடை
6. விவேகானந்தா அறநெறிப் பாடசாலை, சிங்களகொடை

### கொழும்பு

1. ஸ்ரீ அபிராமி அறநெறிப் பாடசாலை
2. ஆரிய பட்டர் பாலமந்திர் அறநெறிப் பாடசாலை,

### கண்டி

1. சிவசக்தி அறநெறிப் பாடசாலை, உடுவல கீழ்ப்பிரிவு

### கம்பஹா

1. ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தான அறநெறிப் பாடசாலை, ஹேகித்த, வத்தளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. கண்ணகி அம்மன் அறநெறிப் பாடசாலை, தம்பலகாமம்
3. அருள்மிகு சித்தி விநாயகர் அறநெறிப் பாடசாலை முல்லிப்பொத்தானை
4. அன்பு அறநெறிப் பாடசாலை, அன்புவழிபுரம்
5. ஸ்ரீ பால முருகன் அறநெறிப் பாடசாலை, இலிங்கா நகர்
6. விநாயகர் அறநெறிப் பாடசாலை, நித்தியபுரி

**கொழும்பு**

1. விவேகானந்தா அறநெறிப் பாடசாலை, கொட்டாஞ்சேனை
2. சைவ முன்னேற்ற சங்க நால்வர் சமய பாடசாலை, கியூ வீதி
3. ஸ்ரீ தேவி கருமாரி அம்மன் ஸ்ரீ ஐயப்பா சுவாமி அறநெறிப் பாடசாலை, கொள்ளுப்பிட்டி
4. ஸ்ரீ துர்க்கா அறநெறிப் பாடசாலை, வெல்லம்பிட்டிய
5. வாணி வித்தியா அறநெறிப் பாடசாலை, தெமட்டகொட
6. ஸ்ரீ லங்கா விஸ்வகர்மா சங்க வீரேஸ்வரர் அறநெறிப் பாடசாலை, கொட்டாஞ்சேனை

**குருநாகல்**

1. சுவாமி விவேகானந்தர் இந்து அறநெறிப் பாடசாலை, மாவத்துகம
2. சைவ சேவா சங்க அறநெறிப் பாடசாலை, மாகோ

**மாத்தறை**

1. பாரதி அறநெறிப் பாடசாலை, தெனியாய
2. நாவலர் அறநெறிப் பாடசாலை, தெனியாய

**காலி**

1. உமாதேவி மன்ற அறநெறிப் பாடசாலை, தலங்கா தோட்டம், நாகியதெனிய
2. சிவ சக்தி அறநெறிப் பாடசாலை, தலங்கா தோட்டம், நாகியதெனிய

**கிளிநொச்சி**

1. பாமடி ஸ்ரீ சித்தி விநாயகர் அறநெறிப் பாடசாலை, வட்டக்கச்சி
2. வயலூர் முருகன் அறநெறிப் பாடசாலை, இராமநாதபுரம்
3. சித்தி விநாயகர் அறநெறிப் பாடசாலை, திருவையாறு
4. ஸ்ரீ ரங்க நாதர் அறநெறிப் பாடசாலை, வட்டக்கச்சி
5. ஸ்ரீ சோதி விநாயகர் அறநெறிப் பாடசாலை, வட்டக்கச்சி
6. ஆலடி விநாயகர் அறநெறிப் பாடசாலை, இராமநாதபுரம்

2. கோகுலம் அறநெறிப் பாடசாலை, மாபொல, வத்தளை

**மாத்தளை**

1. காஞ்சிப் பெரியார் அறநெறிப் பாடசாலை, நாளந்தா
2. ஸ்ரீ முத்துமாரியம்மன் அறநெறிப் பாடசாலை, வாரியப்பொல
3. மாத்தளை ஸ்ரீ கதிர் வேலாயுத சுவாமி அறநெறிப் பாடசாலை, இராஜா வீதி

**முல்லைத்தீவு**

1. குமுழமுனை கற்பக விநாயகர் அறநெறிப் பாடசாலை, குமிழமுனை
2. மம்மில் பிள்ளையார் அறநெறிப் பாடசாலை, மாங்குளம்
3. ஸ்ரீ பொன்னம்பல ஞான வேலாயுத அறநெறிப் பாடசாலை, புதுக்குடியிருப்பு
4. அதிசய விநாயகர் அறநெறிப் பாடசாலை, விசுவமடு
5. மம்மூலை மகா விஷ்ணு ஆலய அறநெறிப் பாடசாலை, முள்ளியவளை
6. குன்றின் மேற் குமரன் அறநெறிப் பாடசாலை, குமிழமுனை, முள்ளியவளை

**களுத்துறை**

1. ஸ்ரீ முத்துமாரி அம்மன் முகம்மதி அறநெறிப் பாடசாலை, பதுரெலியா
2. அஸ்க்வெலி அறநெறிப் பாடசாலை, பதுரெலியா
3. இந்துமன்ற அறநெறிப் பாடசாலை, பதுரெலியா

**பொலனறுவை**

1. ஸ்ரீ முத்துமாரி அம்மன் அறநெறிப் பாடசாலை, கம்பளை
2. அன்னை சாரதா அறநெறிப் பாடசாலை, கரப்பளை, முத்துக்கல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திணைக்களத்தின் அனுசரணையோடு மட்டகளப்பு ஸ்ரீ சுயம்புலிங்க பிள்ளையார் ஆலயத்தில் நடைபெற்ற பொங்கல் விழாவின் போது அரசாங்க அதிபர் உரை நிகழ்த்துவதையும், பொங்கல் பொங்குவதையும், மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளையும் இதில் காணலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வவுனியா மாவட்டத்தில் திணைக்களமும், சுத்தானந்தா இந்து இளைஞர் சங்கமும் இணைந்து நடாத்திய பொங்கல் விழாவில் திரு. அகளங்கன் அவர்களும் திணைக்களத்தின் அபிவிருத்தி உதவியாளர் செல்வி. கி.கலையமுதா அவர்களும் உரை நிகழ்த்துகின்றனர்



பொங்கல் விழாவில் நடைபெற்ற போட்டியில் வெற்றி பெற்ற மாணவிக்கு வவுனியா மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர் திரு நா. திருஞானசம்பந்தம் அவர்கள் பரிசளிக்கின்றார்



பொங்கல் விழாவில் கலந்து கொண்ட பொதுமக்கள், மாணவர்கள் ஆகியோரில் ஒரு தொகுதியினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அம்பாறை மாவட்டம் ஆலையடிவேம்பு இந்து மாமன்றத்தில் நடைபெற்ற தைப்பொங்கல் விழா வில் திணைக்களத்தின் அறநெறிப்பிரிவின் உதவிப் பணிப்பாளர் திருமதி. கு.ஹேமலோஜினி இறு வெட்டு வழங்குகிறார்.



அம்பாறை மாவட்டம் ஆலையடிவேம்பு இந்து மாமன்றத்தில் நடைபெற்ற தைப்பொங்கல் விழா வில் இடம்பெற்ற மாணவர்களின் கலை நிகழ்வு.




அம்பாறை மாவட்டம் வீரமுனை, ஸ்ரீ சிந்தா யாத்திரைப் பிள்ளையார் ஆலயத்தில் நடைபெற்ற மகா சிவராத்திரி விழாவில் திணைக்களத்தின் அம்பாறை மாவட்ட அபிவிருத்தி உதவியாளர் திரு.குணநாயகம் உரையாற்றுவதையும் விழாவில் கலந்து கொண்டோரையும் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அநுராதபுரம் மாவட்டத்தின் ஓயாமடுலை என்னும் பிரதேசத்தில் பெப்ரவரி 04 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை நடைபெற்ற "தேசத்திற்கு மகுடம்" என்ற கண்காட்சியில் அமைக்கப்பட்டிருந்த திணைக்கலத்தின் காட்சிக் கூடம்.



இக்கண்காட்சிக்கு வருகை தந்த மக்கள் திணைக்களத்தின் காட்சிக் கூடத்தைப் பார்வையிடுவதையும்



திணைக்களத்தின் கொழும்பு மாவட்ட கலாசார உத்தியோகத்தர் மக்களுக்கு விளக்கமளிப்பதையும் காணலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திணைக்களத்தின் கொழும்பு மாவட்ட கலாசார உத்தியோகத்தர் திருமதி.க நிர்மலா அவர்களால் 09.03.2012 இல் காக்கை தீவு இராஜேஸ்வரி ஆலயத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட சமய சொற்பொழிவு நிகழ்ச்சியில் செற்பொழிவாற்றிய கலாபூஷணம் திருமதி வசந்தா வைத்தியநாதன் அவர்களையும் நிகழ்வில் கலந்து கொண்ட பொதுமக்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வவுனியா உகடகிளாங்குளம் சித்தி
விநாயகர் ஆலயத்தில் 25.02.2012
அன்று நடைபெற்ற கச்சியப்பர் விழாவில்
திணைக்களத்தின் அபிவிருத்தி உதவியாலர்
செல்வி. கலையமுதா மற்றும் அதிதிகள்
விளக்கேற்றுவதையும் கலந்து கொண்ட
அறநெறிப்பாடசாலை மாணவர்களையும்
காணலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




12.02.2012 வவுனியா மாவட்டம் தோடையாற்றுப் பிள்ளையார் ஆலயத்தில் நடைபெற்ற திருவள்ளுவர் குரு பூசை நிகழ்வில் கலந்துகொண்ட அறநெறிப்பாடசாலை மாணவர்களையும் அவர்களின் நடன நிகழ்வையும் காணலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திணைக்களத்தின் யாழ் மாவட்ட அபிவிருத்தி உதவியாளர் திருமதி மகிந்தினி அவர்களால் 29.01.2012 அன்று கம்பர் மலை ஞான வைரவர் ஆலய அறநெறிப்பாடசாலையில் நடைபெற்ற அப்பூதியடிகள் குரு பூசை நிகழ்வில் இடம்பெற்ற கலை நிகழ்ச்சிகயையும் கலந்து கொண்டோரையும் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமயச் சொற் பொழிவுகள்

திணைக்களத்தின் ஏற்பாட்டில் நாடளாவிய ரீதியில் இந்து சமய விழாக்கள், விசேட தினங்கள் ஆகியவற்றில் ஆன்மீகத் தலைப்புகளில் சிறந்த சமய சொற்பொழிவாளர்களால் சொற்பொழிவுகள் நடத்தப்பட்டுவருகின்றது.

அதற்கமைய, கொழும்பு ஸ்ரீ ராஜராஜேஸ்வரி ஆலயத்தில் தை மாதம் 24 ஆம் திகதியன்று கொழும்பு கணபதி மகாவித்தியாலயத்தின் இந்து சமய ஆசிரியை செல்வி. கணேசன் மகாலெட்சுமி அவர்களால் ''நலம் தரும் நாயகி'' என்ற தலைப்பிலும் பண்டிதை செல்வி. யோகா சோமசுந்தரம் அவர்களால் பெப்ரவரி 24 ஆம் திகதியன்று வவுனியா மாவட்ட பறண்நட்டகல் அறநெறிப் பாடசாலையில் ''மாணவர்கள் பின்பற்ற வேண்டிய நற்பழக்க வழக்கங்களும் அவர்களின் விடா முயற்சியின் பலன்களும்'' என்ற தலைப்பிலும் இந்து சமயச் சொற்பொழிவுகள் நடைபெற்றன.

யாழ்.மாவட்டம் வதிரி ஸ்ரீ பிரமானந்தா ஆச்சிரம அறநெறிப் பாடசாலையில் ''சக்தி தத்துவம்'' என்ற தலைப்பில் திரு. சுரேந்திரன் அவர்களும் திடப்புலம் நரசிங்க வைரவர் ஆலயத்தில் ''உதித்தனன் உலகம் உய்ய'' என்ற தலைப்பில் இளம் சைவப்புலவர் திரு. கயிலை நாதன் அவர்களும் உரை நிகழ்த்தினார்கள்.

கொழும்பு ஸ்ரீ ராஜராஜேஸ்வரி ஆலயத்தில் மார்ச் மாதம் 9 ஆம் திகதியன்று அருள்மொழியரசி வித்துவான் திருமதி. வசந்தா வைத்தியநாதன் அவர்களின் ''சமயத்தின் பேருண்மை'' என்னும் தலைப்பில் சமய சொற்பொழிவு நடைபெற்றது.

## மதங்களின் ஒற்றுமை!

எல்லாச் சமயங்களும் கடவுளை வழிபடவே ஏற்பட்டன ஆகும். எல்லாச் சமயங்களும் கடவுள் ஒருவர் என்றே சொல்கின்றன. ஒருவரேயான அந்தக் கடவுள் எந்தச் சமயத்தின் மூலம் வழிபட்டாலும் அதை ஏற்றுக்கொள்ளத்தான் செய்வார். எனவே எவருமே தாங்கள் பிறந்த மதத்தை விட்டு இன்னொரு மதத்தைத் தழுவ வேண்டியதில்லை.

கோயில், சர்ச், மசூதி, விஹாரம் முதலிய கட்டடங்கள் ஒன்றுக்கொன்று வித்தியாசப்படலாம். உள்ளே இருக்கிற மூர்த்தி அல்லது சின்னம் மாறுபடலாம். ஒவ்வொன்றிலும் சடங்குகளும் வேறு வேறாக இருக்கலாம். ஆனால், அநுக்கிரகம் செய்கிற பரமாத்மா மாறவில்லை. ஒவ்வொரு தேச ஆசாரத்தையும் ஒவ்வொருவித ஜனக்கூட்டத்தின் மனப் பான்மையையும் பொறுத்துப் பல்வேறு சமயங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இவையெல்லாம் ஒரே பரமாத்மாவை அவரவர் மனோபாவப்படி பக்தி செய்து, அவரோடு சேருவதற்கு வழி செய்பவையே. எனவே எவரும் தங்கள் மதத்தை விட்டுவிட்டு இன்னொன்றுக்கு மாற வேண்டியதில்லை. இப்படி மதம் மாறுகிறவர்கள் தாங்கள் பிறந்த மதத்தைக் குறைவுபடுத்துவது மட்டுமின்றி தாங்கள் சேருகிற மதத்தையும் குறைவு படுத்துகிறார்கள். கடவுளையும் குறைவுபடுத்துகிறார்கள்.

காஞ்சி காமகோடி பீடாதிபதி
ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி மகா ஸ்வாமிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாயன்மார், ஞானியர், குருபூசைகள்

திணைக்களத்தினால் சைவ சமய நாயன்மார்கள் சந்தான குரவர்கள், சமய ஞானிகள் ஆகியோரின் குருபூசைத் தினங்கள் மாவட்ட ரீதியில் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

## தாயுமானவர் குருபூசை

திணைக்களத்தின் கொழும்பு மாவட்டக் கலாசார உத்தியோகத்தர் திருமதி. க.நிர்மலா அவர்களால் தெகிவளை, தமிழ் மகா வித்தியாலயத்தில் தை மாதம் 18 ஆம் திகதி புதன்கிழமையன்று ஒழுங்கு செய்யப்பட்டு சிறப்புடன் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி உதவியாளர் திருமதி சி.சிவலிங்கம் அவர்களின் தலைமையில் குருக்கள் மடம் சிவநெறி மன்ற அறநெறிப் பாடசாலையில் 22/02/2012 ஆம் திகதி புதன்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

## அப்பூதியடிகள் குருபூசை

தை மாதம் 26 ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி உதவியாளர் திருமதி. ப.எழில்வாணி தலைமையிலும் தை மாதம் 29 ஆம் திகதி யாழ்.மாவட்ட அபிவிருத்தி உதவியாளர் திருமதி. மகிந்தினி தலைமையில் கம்பர் மலைஞான வைரவர் ஆலயத்திலும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி உதவியாளர் திருமதி. சி.செல்வமலர் தலைமையில் அம்பிளாந்துறை இந்து இளைஞர் மன்றத்திலும் அப்பூதியடிகள் குருபூசை சிறப்பாக நடைபெற்றன.

**கட்டுப்பாடு இருந்தால் தான் ஒழுக்கத்தோடு முன்னேற முடியும். கட்டுப்பட்டு நடப்பதற்கு அடக்கம் வேண்டும். அகங்காரம் போனால் தான் அடக்கம் வரும். சகல விடயங்களுக்கும் ஒழுக்கம் அடிப்படையாக இருக்க வேண்டும்.**

**தனக்கென்று எவ்வளவு குறைவாகச் செலவழிக்க முடியுமோ, அப்படி எளிமையாக வாழ்ந்து மிச்சம் பிடித்து, அதைத் தர்மத்துக்குச் செலவழிக்க வேண்டும். இப்படிச் செலவழிப்பது தான் ''தனக்கு மிஞ்சிய தர்மம்'' என்பதாகும்.**

*சோம்பித் திரிபவனும் மிதமிஞ்சி உண்பவனும் இன்ப வாழ்க்கைப் பிரியனும் அறிவின் பாதையை அறிவதில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணப்ப நாயனார் குருபூசை

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி உதவியாளர் திருமதி. ப.எழில்வாணி அவர்களின் ஏற்பாட்டில் 05/02/2012 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கண்ணப்ப நாயனாரின் குருபூசை நடைபெற்றது.

## சண்டேஸ்வரர் குருபூசை

கோண்டாவில் தில்லையம்பதி சிவகாசி அம்மன் அறநெறிப் பாடசாலையில் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அபிவிருத்தி உதவியாளர் திருமதி. மா.அனந்த லெட்சுமி அவர்களின் ஏற்பாட்டில் மண்டூர் விக்னேஸ்வரா அற நெறிப் பாடசாலையில் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி உதவியாளர் திருமதி. சி.செல்வமலர் அவர்களின் ஏற்பாட்டில் 12/02/2012 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சண்டேஸ்வரர் குருபூசை சிறப்புடன் நடைபெற்றது.

## திருவள்ளுவர் குருபூசை

திருவள்ளுவர் குருபூசையை வவுனியா மாவட்ட அபிவிருத்தி உதவியாளர் செல்வி. கலையமுதா அவர்கள் 12/02/2012 ஆம் திகதி தோடையாற்றுப் பிள்ளையார் ஆலயத்திலும், கொழும்பு மாவட்ட கலாசார உத்தியோகத்தர் 10/03/2012 ஆம் திகதி கொழும்பு ஜெயந்திநகர் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய மண்டபத்திலும் யாழ்.மாவட்ட அபிவிருத்தி உதவியாளர் திருமதி. மா.அனந்தலெட்சுமி 11/03/2012 ஆம் திகதி நெட்டிலிப்பாய் கணேசா அறநெறிப் பாடசாலையிலும் சிறப்பாக ஒழுங்கு செய்து நடத்தினார்கள்.

ஒருவருடைய பிறப்பைப் பற்றியோ அல்லது செயல்களைப் பற்றியோ எண்ணாமல் அவனுடைய கொள்கைகளைப் பின்பற்றி பணிவிடை செய்வது சிறந்தது. கடவுளுக்கு எதை நீ அர்ப்பணிக்கிறாயோ அது மிகவும் புனிதமானது. நீ கடவுளிடம் சரணாகதி அடையும் போது உன் பாவங்கள் நீங்குகின்றன. மற்றவர்களை அவமதிப்பது மிகக் கொடிய செயலாகும்.

பக்தர்களை எப்போதும் புகழ்ந்து பணிவிடை செய்து கொண்டே இருக்க வேண்டும். பக்தி மார்க்கத்தைத் தவிர வேறு எதையும் ஏற்றுக்கொள்ளக்கூடாது. புனிதமான ஆழ்வார்களின் திவ்ய பாசுரங்களை நாள் தோறும் படிப்பது நல்லது.

இழிசெயல் புரிபவர்கள், ஏளனம் செய்பவர்கள், இறையடியார்களை நிந்திப்பவர்கள், புலித்தோல் போர்த்திய கபடதாரிகள், குருவைத் திட்டும் கயவர்கள் ஆகியோரைக் கண்ணால் கூட பார்க்கக் கூடாது.

இறைவனுக்கு அர்ப்பணிக்காத உணவு, உடை, பூக்கள், சந்தனம், வெற்றிலை பாக்கு, பானம் எதையும் ஏற்றுக்கொள்ளக்கூடாது. எப்பொருளையும் மானசீகமாகக் கடவுளுக்கு சமர்ப்பித்து விட்டு எடுத்துக்கொள்வது நல்லது. நற்பிறப்பாளர், உயர்ந்த வாழ்க்கையுடையவர் ஆகியோரிடமிருந்து பெறும் உணவு மட்டுமே உண்பதற்குத் தகுந்ததாகும்.

ஒரு கடவுளை வணங்குவது நல்லது. பல தெய்வங்களை வணங்குதல் கூடாது. அது கடவுளை அவமதிப்பதாகும். நீ விரும்பும் கடவளின் மீது உன் மனதைச் செலுத்துவது நல்லது.

நற்குணமுடையவர்கள், அறிவாளிகள், தர்மசிந்தனையுடையவர்கள் ஆகியோர்களைக் கண்டால் பணிந்து வணங்க வேண்டும். இன்பம், துன்பம் இரண்டையும் சமமாகப் பாவிக்க வேண்டும். தொண்டு செய்வதன் மூலமே கடவுளை அடைய முடியும் என்பதை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும்.

**- ஔவையார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து தர்மாசிரியர் வழிகாட்டல் கருத்தரங்கு

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்குரிய தகுதி காண் பரீட்சையாக தர்மாசிரியர் பரீட்சையை ஆண்டுதோறும் பரீட்சைகள் திணைக்களத்தின் ஊடாக நடத்தி வருகின்றது. இப்பரீட்சை **வேதங்களும் ஆகமங்களும் சமய ஞானிகளும் சமயப் பெரியார்களும் சைவ சமய வரலாறு, பன்னிரு திருமுறைகள், கோயில்களும் கலைகளும்** என்னும் ஐந்து ஆழமான பாடநெறிகளைக் கொண்டமைந்தது. இப்பாடநெறிகளில் ஆசிரியர்களைத் திறமையானவர்களாக உருவாக்கும் வண்ணம் திணைக்களம் வருடந்தோறும் இந்து தர்மாசிரியர் வழிகாட்டற் கருத்தரங்கை நடத்தி வருகின்றது.

இவ்வாண்டு கொழும்பு, கம்பஹா, குருநாகல், புத்தளம், கண்டி, மாத்தளை, இரத்தினபுரி, கேகாலை, களுத்துறை, காலி, மாத்தறை, மொனறாகலை, பதுளை, நுவரெலியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு பெப்ரவரி 17,18 ஆம் திகதிகளில் கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் வதிவிடக் கருத்தரங்காக நடைபெற்றது. இதில் சுமார் 225 ஆசிரியர்கள் கலந்து பயனடைந்தனர். சைவப் புலவர் திரு. சு.செல்லத்துரை, வித்துவான் திருமதி. வசந்தா வைத்தியநாதன், திருமதி. நித்தியவதி நித்தியானந்தன், திருமதி. ஹேமா சண்முக சர்மா, திருமதி. ஹேமலோஜினி குமரன் ஆகியோரால் விரிவுரைகள் நடத்தப்பட்டன.

மட்டக்களப்பு, அம்பாறை, பொலன்னறுவை, திருகோணமலை ஆகிய மாவட்ட ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு மார்ச் மாதம் 31 ஏப்ரல் மாதம் 01 ஆம் திகதிகளில் மட்டக்களப்பு மயிலம்பாவெளி ஸ்ரீ காமாட்சி அம்மன் ஆலய கருணாலய மண்டபத்தில் நடைபெற்றது. இதில் சைவப்புலவர் திரு. சு.செல்லத்துரை, வித்துவான் திருமதி. வசந்தா வைத்தியநாதன், திருமதி. நித்தியவதி நித்தியானந்தன், திருமதி. ஹேமலோஜினி குமரன் ஆகியோர் விரிவுரைகளை நிகழ்த்தினார்கள்.

- *உன்னுடைய கடமைகளை உண்மையாகச் செய். உரிமைகள் கேட்காமலே உடன் வரும்.*
- *உனது தேவையிற் பிரார்த்தனையை அறிவாய், துன்பத்திற் சிந்திக்கவும் விசாரணை செய்யவும் முற்படுவாய்.*
- *வாழ்வு தொண்டு செய்ய ஏற்பட்டதே தவிர சுய நலத்திற்கல்ல.*
- *மனிதனின் முடிவான நிலை பூரண தெய்வீக நிலையே.*
- *இறைமையைக் காண வானத்தைப் பார்ப்பது பிரயோசனமற்றது. உன் உள்ளே திரும்பிப் பார்.*
- *நோய், உனது மனதை அகமுகமாக இறைவன்பால் திருப்ப வந்த ஆசியே.*
- *வருமுன் காப்பது நல்லது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறநெறி ஆசிரியர்களிற்கான வதிவிடக் கருத்தரங்கு

திணைக்களத்தினால் ஆண்டு தோறும் அறநெறி ஆசிரியர்களுக்கு நடத்தப்பட்டு வந்த ஒருநாள் கருத்தரங்கு இந்த ஆண்டு ஏழு நாட்கள் கொண்ட வதிவிடக் கருத்தரங்காக நடத்தப்பட்டது. அந்த வகையில் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, பொலனறுவை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு பெப்ரவரி 25 ஆம் திகதி தொடக்கம் மார்ச் 02 ஆம் திகதி வரை கொழும்பு, இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் வதிவிடக் கருத்தரங்கு நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து 88 ஆசிரியர்களும் அம்பாறை மாவட்டத்திலிருந்து 36 ஆசிரியர்களும் திருகோணமலை மாவட்டத்திலிருந்து 9 ஆசிரியர்களும் பொலனறுவையிலிருந்து 4 ஆசிரியர்களும் கலந்துகொண்டனர். அறநெறிப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் திருமதி. ஹேமலோஜினி குமரன் தலைமையில் நடைபெற்ற தொடக்க வைபவத்தில் இராமகிருஷ்ண மிஷன் சுவாமி சர்வரூபானந்த மகராஜ் அவர்கள் ஆசியுரை வழங்கினார். இதில் உதவிப் பணிப்பாளர் திரு. ம.சண்முகநாதன், கணக்காளர் திரு. எம்.ஜி.காண்டீபன் ஆகியோர் கலந்துகொண்டார்கள்.

முதல் நாள் நிகழ்வில் சைவப்புலவர் அ.செல்லத்துரை அவர்கள் **'சைவ சித்தாந்த விளக்கம், ஆலய அமைப்பு விதி மற்றும் வழிபாட்டு முறைகள்'** பற்றியும் திருமதி. நித்தியவதி நித்தியானந்தன் அவர்கள் **'வேதங்களும் ஆகமங்களும்'** பற்றியும் திருமதி. ஹேமா சண்முக சர்மா அவர்கள் **'அறநெறிகளை மாணவர்களுக்கு கற்பித்தல்'** தொடர்பான செயன்முறை விளக்கத்தையும் சைவப்புலவர் செ.நவநீதகுமார் அவர்கள் **'பூர்வக் கிரியைகள்'** பற்றியும் அபிவிருத்தி உதவியாளர் திருமதி. ப.எழில்வாணி அவர்கள் **பூமாலை கட்டும்** செயல்முறைப் பயிற்சியையும் அளித்தார்கள்.

இரண்டாம் நாள் அதிகாலை யோகாசனப் பயிற்சி அளிக்கப்பட்டது. பின்பு அறநெறி ஆசிரியர்களைக் கொழும்பு கொச்சிக்கடை ஸ்ரீ பொன்னம்பலவானேஸ்வரர் ஆலயத்திற்கு அழைத்துச் சென்று **சிவாலய அமைப்பு, வழிபாட்டு முறை** பற்றிய செயன்முறை விளக்கத்தை சைவப்புலவர் திரு சு.செல்லத்துரை, வித்துவான் வசந்தா வைத்தியநாதன் ஆகியோர் அளித்தனர். பின்பு திரு. செ.நவநீதகுமார் அவர்கள் **அபரக்கிரியைகள்** பற்றியும் திருமதி. ஹேமா சண்முக சர்மா அவர்கள் **குழுச் செயன்முறைப் பயிற்சி மூலம் கற்பித்தல் முறை** பற்றியும் விளக்கினார்.

மூன்றாம் நாள் இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி சர்வரூபானந்த மகராஜ் அவர்கள் தனிமனித ஒழுக்கம், அறநெறி பற்றிய விளக்கம் ஆகியவை பற்றி ஆன்மீக உரை நிகழ்த்தினார். தொடர்ந்து, கலா

*வெட்ட வெளியான மனது துன்பத்திலேயே இருக்கிறது. அது சாத்தானின் நிலைக்களம். நினைவில் வைத்துக்கொள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதி குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள் **சமூக விழுமியங்களைக் கற்பிக்கும் முறை தொடர்பாக தத்துவ, அனுபவ ரீதியான விளக்கங்களையும்** வித்துவான் திருமதி. வசந்தா வைத்தியநாதன் அவர்கள் **விரதங்கள்** பற்றியும் செல்வி. கிருபாதேவி வீரசிங்கம் அவர்கள் **உளவியலும் அறநெறியும்** என்பது பற்றியும் உரை நிகழ்த்தினார்கள்.

நான்காம் நாளில் திருமதி. நித்தியவதி நித்தியானந்தன் அவர்கள் **சங்ககால, பல்லவர் கால, சோழர் கால சமய பண்பாட்டு நெறிகள், உபநிடதங்கள்** பற்றியும் உதவிப் பணிப்பாளர் திருமதி. ஹேமலோஜினி குமரன் அவர்கள் **தென்கிழக்காசிய நாடுகளில் இந்துப் பண்பாட்டு நெறி, புராண இதிகாசங்கள்** பற்றியும் சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்கள் **பாரம்பரிய கிராமியக் கலைகளான கூத்து, வில்லுப்பாட்டு, கதாப்பிரசங்கம் போன்றவை** பற்றியும் உரையாற்றியதுடன்; வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன் அவர்களால் **கோலம் போடுதல்** பற்றிய செயன்முறை விளக்கமும் அளிக்கப்பட்டது.

ஐந்தாம் நாள் இந்துப் பண்பாட்டு கலைகள் தொடர்பான விளக்கங்களை திணைக்களத்தின் சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர் திருமதி. தேவகுமாரி ஹரன் அவர்களும் தென்னிலங்கையில் இந்துக் கோயில்கள் பற்றி இந்து சேவா சங்க உறுப்பினர் திரு எஸ்.திருச் செல்வம் அவர்களும் விரிவுரையாற்றினார்கள்.

நிறைவு விழா மார்ச் 02 ஆம் திகதி வெள்ளிக்கிழமை திணைக்களப் பணிப்பாளர் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் உதவிப் பணிப்பாளர்கள் திரு. ம.சண்முகநாதன், திருமதி. ஹேமலோஜினி குமரன், கணக்காளர் திரு எம்.ஜி.காண்டீபன், நிர்வாக உத்தியோகத்தர் திரு. ரி.ஜெயசோதி, கலாசார உத்தியோகத்தர் திருமதி. க.நிர்மலா, அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் திணைக்கள அலுவலர்கள் பலரும் கலந்துகொண்டனர். இறுதியாக, கருத்தரங்கில் பங்குபற்றிய ஆசிரியர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. இக்கருத்தரங்கில் பங்குபற்றிய அனைத்து ஆசிரியர்களுக்கும் சான்றிதழ்களும் நூல்களும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

- **அறியாமை உனது பார்வையை மறைத்து ஏமாற்றிக் கீழே தள்ளுகிறது. அதை ஒழி.**
- **மனதையும் புலன்களையும் அடக்கி ஆளுவதே வீரம். நீ ஒரு வீரனாக இரு.**
- **உலகத்தில் நல்லது என்றும் கெட்டது என்றும் ஒன்றுமில்லை. உனது சிந்தனையே அவ்வாறு ஆக்குகிறது.**
- **உன்னத ஆத்மீக வாழ்வின் அடிப்படை ஒழுங்கான வாழ்வே ஆகும். உன்னை ஒழுங்குபடுத்திக் கொள்.**
- **அறிவுதான் சம்சார சாகரத்தைக் கடக்க இருக்கும் ஒரே வழி.**
- **ஒரு மனிதனுடைய சொல்லின் உண்மையைச் செயலிற் சோதி.**
- **பரிபூரணத்தை அனுபவிப்பதே சமாதி எனப் படுகிறது. அது துன்ப நிலையைக் கடந்தது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து ஆலயங்களின் புனரமைப்புக்கான நிதியுதவி

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் மூலம் வட கிழக்கு தவிர்ந்த 136 ஆலயங்க ளிற்கு தலா ரூபா 1,00,000 வீதம் நிதி உதவிக்கான கடிதங்கள் வழங்கும் வைபவம் கடந்த மார்ச் மாதம் 06 ஆம் திகதி கொழும்பு வெள்ளவத்தை இராம கிருஷ்ணமிஷன் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு இலங்கை பிரதமரும் புத்த சாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சருமான கௌரவ தி.மு.ஜயரட்ண அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரட்ண, பொருளாதார பிரதி அமைச்சர் முத்து சிவலிங்கம், புத்த சாசன மத அலுவல்கள் பிரதி அமைச்சர் எம்.கே.ஏ.டி.எஸ்.குணவர்தன, நுவரெலியா மாவட்ட செயலாளர் கே. குமாரசிறி, கொழும்பு மாவட்ட மேலதிகச் செயலாளர் இளமதி சபாலிங்கம், அமைச்சின் செயலாளர் திரு. கெசியன் ஹேரத், அமைச்சின் மேலதிக செயலாளர் திரு. அனுராதா விஜ யகோன், பிரதமரின் பிரத்தியேகச் செயலாளர் செனானி லங்கா ஜயரட்ண ஆகியோர் சிறப்பு விருந்தின ராகக் கலந்துகொண்டார்கள்.

கலந்துகொண்ட பிரமுகர்களின் மங்கள விளக்கேற்றலுடன் வைபவம் ஆரம்பமாகியது. சிவஸ்ரீ க.வைதீஸ்வரக் குருக்கள் வேதபாராயணம் செய்தார். அபிவிருத்தி உதவியாளர் திருமதி. பவானி முகுந் தன் தேவாரம் இசைத்தார். அமைச்சின் மேலதிகச் செயலாளர் திரு அநுராதா விஜயக்கோன் வரவேற் புரை நிகழ்த்தினார்.

கௌரவ பிரதமர் அவர்களுக்கு கொழும்பு இராமகிருஷ்ணமிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி சர்வரூ பானந்த மஹராஜ் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். தொடர்ந்து சுவாமி அவர்களின் ஆசியுரை இடம்பெற்றது.

கௌரவ பிரதமர் அவர்கள் தமது உரையில்;

''எமது அமைச்சு இலங்கையில் உள்ள அனைத்துச் சமயங்களையும் ஒரே சமனாகப் பேணுகிறது. இந்து சமயம் மிகப் பழமையான ஒரு சமயம் ஆகும். பெருமளவு பௌத்த மக்கள் இந்து ஆலயங்களுக்குச் சென்று நம்பிக்கையோடு வழிபடுகின்றனர். இந்து ஆலயங்களின் அபிவிருத்திக்காக நாம் அரசு ரீதியில் பெருமளவு உதவி செய்கின்றோம். கடந்த ஆண்டு யாழ்ப்பாண மாவட்டத்தில் 238 ஆலயங்களுக்கும் வவு னியா மாவட்டத்தில் 111, ஆலயங்களுக்கும் ரூபா 100000 வீதம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. இன்று 11 மாவட்டங்களைச் சேர்ந்த 136 ஆலயங்களுக்கு நிதியுதவிக்கான கடிதங்கள் வழங்கப்படுகின்றன. இந் தத் திட்டங்களைச் செயற்படுத்துவதற்காக நான் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்'' என்று குறிப்பிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் வைபவத்தின் போது கௌரவ அமைச்சர்களான ஜோன் செனவிரட்ண, முத்து சிவலிங்கம் ஆகியோரும் உரை நிகழ்த்தினர். பின்னர் ஆலய நிர்வாகத்தினரிடம் நிதியுதவி தொடர்பான கடிதங்கள் கௌரவ பிரதமர் மற்றும் அமைச்சர்களினால் கையளிக்கப்பட்டன. திணைக்களப் பணிப்பாளர் திருமதி. சாந்தி நாவுக்கரன் அவர்களின் நன்றியுரையுடன் வைபவம் நிறைவு பெற்றது.

## நிதியுதவி பெற்ற ஆலயங்களின் விபரம்

| மாவட்டம் | ஆலயங்களின் எண்ணிக்கை |
|---|---|
| பதுளை | 20 |
| கண்டி | 19 |
| கேகாலை | 07 |
| மாத்தளை | 10 |
| நுவரெலியா | 23 |
| இரத்தினபுரி | 30 |
| மொனராகலை | 04 |
| புத்தளம் | 04 |
| குருநாகல் | 03 |
| களுத்துறை | 10 |
| கொழும்பு | 06 |
| மொத்தம் | 136 |

- ஆத்மீக மாறுபாட்டை உடனேயே ஒரு அற்புதத்தின் மூலம் அடைய முடியாது.
- மனிதனுக்கு இனி பட்டங்கள் தேவையில்லை. ஆனால், ஒழுக்கம் வேண்டும். மேற்படிப்பு வேண்டாம். ஆனால், அறிவு வேண்டும்.
- உண்மையின்மை புகழையுஞ் செல்வத்தையும் அழித்துவிடுகிறது.
- உலகத்தில் எதுவும் நிச்சயமல்ல. ஆனால், மரணம் நிச்சயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துச் சிறுவர், முதியோர் இல்லங்கள்

இலங்கையின் பல பாகங்களிலும் இயங்குகின்ற ஆதரவற்ற இந்துச் சிறுவர் மற்றும் முதியோர் இல்லங்கள் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்படுகின்றன. இங்ஙனம் பதிவு செய்யப்படும் இல்லங்களில் உள்ள இந்துச் சிறுவர் மற்றும் முதியோர் தொடர்பான தரவுகள் வருடந் தோறும் திணைக்களத்தின் மூலம் சேகரிக்கப்படுகின்றன.

சிறுவர் மற்றும் முதியோர் எண்ணிக்கைக்கேற்ப இல்லத்தின் மேம்பாட்டிற்காக வருடந்தோறும் ஒரு சிறு தொகை நிதியுதவி திணைக்களத்தின் மூலம் உரிய பிரதேச செயலகங்களூடாக வழங்கப்படுகின்றது.

அதன் பின்னர் இந்நிதியைக்கொண்டு மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் தொடர்பாக அவ்வப் பிரதேச அபிவிருத்தி உதவியாளர் மற்றும் பிரதேச செயலகங்களூடாக அறிக்கைகளும் பற்றுச் சீட்டுகளும் கோரப்படுகின்றன. இங்ஙனம் 2012 ஆம் ஆண்டு நிதியுதவி பெற்ற இந்துச் சிறுவர் மற்றும் முதியோர் இல்லங்கள் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**இந்துச் சிறுவர்/முதியோர் இல்லங்களுக்கான நிதியுதவி விபரம்;**

| இல. | மாவட்டம் | இல்லத்தின் பெயர், முகவரி | வழங்கப்பட்ட தொகை (ரூ.) |
|---|---|---|---|
| 01 | கொழும்பு | பக்தி வேதாந்த சிறுவர் இல்லம், வத்தளை | 75,000/- |
| 02 | யாழ்ப்பாணம் | சைவ வித்தியா விருத்திச் சங்கம், திருநெல்வேலி | 100,000/- |
| 03 | யாழ்ப்பாணம் | ஸ்ரீ பரமானந்தா சிறுவர், முதியோர் இல்லம், வதிரி கரவெட்டி | 100,000/- |
| 04 | யாழ்ப்பாணம் | துர்க்காபுரம் மகளிர் இல்லம், தெல்லிப்பளை | 75,000/- |
| 05 | கிளிநொச்சி | மகாதேவ ஆச்சிரம சைவச் சிறுவர் இல்லம், புதுமுறிப்பு, உருத்திரபுரம், கிளிநொச்சி | 100,000/- |
| 06 | வவுனியா | இந்து அன்பகம் சிறுவர் இல்லம், வேப்பங்குளம், வவுனியா | 60,000/- |
| 07 | வவுனியா | ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அருளகம், கோவில் குளம், வவுனியா | 100,000/- |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 08 | வவுனியா | சிவன் முதியோர் இல்லம், கோவில் குளம், வவுனியா | 100,000/- |
| 09 | அம்பாறை | அம்மன் மகளிர் இல்லம், கோளாவில் -01, அக்கரைப்பற்று | 50,000/- |
| 10 | அம்பாறை | சுவாமி விபுலானந்தா சிறுவர் இல்லம், அக்கரைப்பற்று | 20,000/- |
| 11 | அம்பாறை | சீர்பாததேவி சிறுவர் இல்லம், வீரமுனை, சம்மாந்துறை | 30,000/- |
| 12 | மட்டக்களப்பு | திருஞானசம்பந்தர் குருகுலம், களுதாவளை | 40,000/- |
| 13 | மட்டக்களப்பு | சக்தி சமூக நலன்புரி நிலையம் (சக்தி இல்லம்) களுவாஞ்சிக்குடி | 25,000/- |
| 14 | மட்டக்களப்பு | யோக சுவாமி சைவ மகளிர் இல்லம், சித்தாண்டி | 30,000/- |
| 15 | மட்டக்களப்பு | திலகவதியார் மகளிர் இல்லம், திருப்பழுகாமம், | 40,000/- |
| 16 | மட்டக்களப்பு | ஹரி சிறுவர் இல்லம், கல்லடி, மட்டக்களப்பு | 50,000/- |
| 17 | மட்டக்களப்பு | விவேகானந்தா சிறுவர் இல்லம், வாழைச்சேனை | 20,000/- |
| 18 | மட்டக்களப்பு | 'கருணாலயம்', சவுக்கடி வீதி, மயிலம்பாவெளி, தன்னாமுனை, மட்டக்களப்பு | 35,000/- |
| 19 | மட்டக்களப்பு | ஸ்ரீ சண்முக மகளிர் இல்லம், வித்தியாலயம் வீதி திருகோணமலை | 40,000/- |

- கத்தியையுந் துப்பாக்கியையும் விட மனமும் அறிவும் உலகத்தையும் அதிகம் வசப்படுத்தியிருக்கின்றன.
- வாழ்க்கையின் குறிக்கோள் துன்பத்தைத் தவிர்த்து நிலையான இன்பத்தை அடைவதே. கடவுளே இன்பம்.
- ஆத்ம பரிபாகத்தையடையத் தீவிரமான மனங்கொண்ட முயற்சியே யோகம் எனப்படும்.
- வருந்தவேண்டாம் நண்பா! குன்றா முயற்சி கொண்டு வாழ்வின் முடிவினை அடைவாய்.
- உனது எண்ணங்களாலேயே நீ நரகத்தை உண்டாக்கிக் கொள்கிறாய். கடவுளை நினை.
- ஒரு ஞானி பல மானிடர்களின் வாழ்வின் அலைமோதல்களைத் தவிர்க்க முடியும்.
- கீர்த்தனை செய்யாத வாழ்வும், வேதங்களைப் படிக்காத வாழ்வும் மலரில்லா நந்தவனம் போலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2011 ஆம் ஆண்டில்
# ஆலயப் புனரமைப்பிற்கான நிதியுதவி

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் மூலம் வருடாந்தம் ஒரு குறித்த எண்ணிக்கையிலான ஆலயங்களுக்கு புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக ஒரு சிறு தொகை நிதியுதவி வழங்கப்படுகின்றது.

ஆலய நிர்வாக சபையினரிடமிருந்து கிடைக்கப்பெறும் கோரிக்கைகளுக்கமைய கௌரவ பிரதமரும் மத அலுவல்கள் அமைச்சருமான தி.மு.ஜயரட்ண அவர்களின் அனுமதியின் பேரில் இந்நிதியுதவி வழங்கப்படுகின்றது.

திறைசேரியிலிருந்து திணைக்களத்திற்கு வருடந்தோறும் கிடைக்கும் நிதி ஒதுக்கீட்டிற்கமையவே இந் நிதியுதவி மேற்கொள்ளப்படுகின்றது. மேலும் நிதியுதவி பெறும் ஆலயங்களிற்குத் தொடர்ச்சியாக வருடந்தோறும் நிதி வழங்குவதற்கான வாய்ப்புகளும் இல்லை.

கடந்த 2011 ஆம் ஆண்டு இத்திணைக்களத்தின் மூலம் மாவட்ட ரீதியில் நிதியுதவி பெற்ற ஆலயங்களின் எண்ணிக்கை வருமாறு:

| இல. | ஆலயங்களின் எண்ணிக்கை | | தொகை (ரூ.) |
|---|---|---|---|
| 1 | அம்பாறை | 10 | 1,000,000.00 |
| 2 | மட்டக்களப்பு | 123 | 12,300,000.00 |
| 3 | திருகோணமலை | 30 | 2,8945,244.45 |
| 4 | கிளிநொச்சி | 37 | 5,900,00.00 |
| 5 | முல்லைத்தீவு | 12 | 2,700,000.00 |
| 6 | யாழ்ப்பாணம் | 238 | 23,800,000.00 |
| 7 | மன்னார் | 13 | 1,300,000.00 |
| 8 | வவுனியா | 111 | 11,100,000.00 |
| 9 | பதுளை | 28 | 2,800,000.00 |
| 10 | கொழும்பு | 7 | 700,000.00 |
| 11 | களுத்துறை | 36 | 2,348,535.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 12 | கண்டி | 58 | 5,800,00.00 |
| 13 | கேகாலை | 12 | 1,200,000.00 |
| 14 | குருணாகல் | 3 | 300,00.00 |
| 15 | மாத்தளை | 14 | 1,400,000.00 |
| 16 | மாத்தளை | 3 | 300,000.00 |
| 17 | மொனராகல | 9 | 900,00.00 |
| 18 | நுவரெலியா | 378 | 3,900,000.00 |
| 19 | பொலனறுவை | 1 | 300,000.00 |
| 20 | புத்தளம் | 8 | 800,000.00 |
| 21 | இரத்தினபுரி | 33 | 3,300,00.00 |
| | மொத்தம் | 824 | 85,043,779.45 |

2011 ஆம் ஆண்டு நிதியுதவி பெற்ற ஆலயங்கள் ஒரு குறித்த புனர்நிர்மாணப் பணியை நிறைவேற்றி,

1 நிறைவேற்றப்பட்ட வேலை பற்றிய அறிக்கை (ஆலயக் கடிதத் தலைப்பில் தலைவர் / செயலாளர் ஒப்பங்களுடன்)

2 செலவுகளுக்கான பற்றுச் சீட்டுகளின் மூலப் பிரதிநிதிகள் (வெள்ளைத் தாள்களில் ஒட்டிய வண்ணம்)


3 நிறைவேற்றிய வேலையைக் காட்டத்தக்க புகைப்படம்.

4 குறித்த நிதி உரிய வகையில் செலவிடப்பட்டது என்பதை உறுதிப்படுத்தக்கூடியவாறு பிரதேச தொழில்நுட்ப உத்தியோகத்தர் பார்வையிட்டு வழங்கும் அறிக்கை என்பவற்றை விரைவில் சமர்ப்பிக்குமாறு திணைக்களம் ஆலயங்களைத் தனித்தனியே கடிதங்கள் மூலம் கோரியுள்ளது.

*உறுதியானதும் நன்கு தீர்மானித்ததுமான முயற்சியைச் செய். நீ வெற்றியடைவாய். முழு முயற்சி முழு வெற்றி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஆலயங்களின் புனரமைப்பிற்கென திணைக்களத்தின் மூலம் நிதியுதவிகான கடிதங்கள் வழங்கும் வைபவம் --- திகதியில வெள்ளவத்தை இரமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் நடைபெற் போது பிரதம விருந்தினராக வருகை தந்த கௌரவ பிரதமர் தி.மு. ஜெயரத்ன அவர்களை மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி சர்வரூபானந்த அவர்கள் கௌரவிப்பதையும் பிரதமர் அவர்கள் ஆலயத்தினருக்கு கடிதங்களை கையளிப்பதையும் படங்களில் காணலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இவ்வைபவத்தில் பங்கு கொண்ட கௌரவ பிரதமர் மற்றும் அமைச்சர்கள் மேடையில் அமர்ந்திருக்கின்றனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இவ்வைபவத்தில் போது கௌரவ பிரதமர் அவர்கள் உரை நிகழ்த்துவதையும் கலந்து கொண்ட கூட்டத்தில் ஒரு பகுதியினரையும் படத்தில் காணலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இவ்வைபவத்தில் முறையே மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி சர்வரூபானந்தா, அரச நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் செனிவரத்ன, பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் முத்து சிவலிங்கம், அமைச்சின் மேலதிகச் செயலாலர் அனுராத விஜயகோன் மற்றும் திணைக்கலத்தின் பணிப்பாலர் திருமதி சாந்தி நாவுக்கரசன் ஆகியோர் உரையாற்றுவதைக் காணலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்நிகழ்வின் போது மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி சர்வரூபானந்தா, அமைச்சர் ஜோன் செனிவரத்ன, பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் முத்து சிவலிங்கம் ஆகியோர் நிதியுதவிக் கடிதங்களை கையளிக்கின்றனர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நாட்டின் சுபீட்சத்திற்காகவும் சௌபாக்கியத்திற்காகவும் நல்லாசி வேண்டி தினைக்களத்தின் அனுசரனையோடு ஜிந்துபிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் 13.03.2012 திகதியன்று நடைபெற்ற பூசைகளுக்கு வருகை தந்த புத்தசாசன மத அலுவல்கள் அமைச்சர் கௌரவ எம்கே ஏடிஸ் குணவர்தன அவர்கள் ஆலய அறங்காவலர் சபையினர் வரவேற்பதையும் அமைச்சர் பூசைகளில் பங்கேற்பதையும் படங்களில் காணலாம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நாட்டின் சுபீட்சத்திற்காக 18.03.2012 ஆம் திகதி வத்தளை, ஹுனுப்பிட்டி ஸ்ரீ முத்துக்குமரன் ஆலயத்தில் நடைபெற்ற பூஜை வழிபாட்டில் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி. சாந்தி நாவுக்கரசன், உதவிப் பணிப்பாளர் திருமதி. கு.ஹேமலோஜினி, கலாசார உத்தியோகத்தர் திருமதி. க.நிர்மலா மற்றும் பலர் கலந்துகொண்ட காட்சி.






நாட்டின் சுபீட்சத்திற்காக யாழ். மாவட்டம், பருத்தித்துறையில் அமைந்துள்ள கற்கோவளம் விநாயகர் ஆலயம், ஸ்ரீசண்டிகா பரமேஸ்வரி ஆலயம் மற்றும் கோண்டாவில் தில்லையம்பதி சிவகாமி அம்பாள் ஆலயம் ஆகியவற்றில் நடைபெற்ற பூஜை வழி பாட்டில் கலந்து கொண்டோர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திணைக்களத்தால் வெளியிடப்படும் நூல்கள் பொதி செய்யப்பட்டு மாவட்டங்களுக்கு விநியோகிக்கும் நிகழ்வு ஏப்ரல் 19ஆம் திகதி நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டோர் மேடையில் அமர்ந்திருப்பதையும்



திணைக்களத்தின் பணிப்பாளர் நூற்பொதி வழங்குவதையும்



இந்து மாமன்றத்தின் உபதலைவர் திரு.சி தனபாலா அவர்கள் நூநூற்பொதி வழங்குவதையும் படங்களிற் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலைத்த உறவு

*போற்றுவதற்கும் சார்ந்திருப்பதற்கும்*
*நின்னையல்லால் வேறு நட்பு யாரையும்*
*யான் அறிந்திலேன்.*

உற்றார் உறவினர் என்பார் எல்லோரும் அவரவர் வினையை
முடிக்க இவ்வையகத்தில் வந்துள்ளார். அப்படி வருவதும்
போவதும் தனித்தனியே நிகழ்கின்றன. ஒருவருக்காக
இன்னொருவர் தனது போக்குவரவை மாற்றுவதில்லை,
ஆதலால் இவர்கள் நிலைத்த உறவினர் ஆகார். கடவுள்
ஒருவரே நிலைத்த உறவு ஆகிறார்.

*என் பெற்ற தாயரும் என்னைப்*
*பிணமெற்று இகழ்ந்துவிட்டார்*
*பொன்பெற்ற மாதரும் போவென்று*
*சொல்லிப் புலம்பிவிட்டார்*
*கொன்பெற்ற மைந்தரும் பின்வலம்*
*வந்து குடமுடைத்தார்*
*உன்பற்றொழிய வொருபற்றும்*
*இல்லை உடையவனே*

**- பட்டினத்தார்**

## நந்திக் கொடிகள் விநியோகம்

*திணைக்களத்தின் மூலம் ஆலய உற்சவங்கள், கும்பாபிஷேகம், வருடாந்தத் திருவிழாக்கள் போன்றவற்றிற்கு பயன்படுத்துவதற்காக நந்திக்கொடிகள் இலவசமாக விநியோகிக்கப்படுகின்றன.*

*திருவிழாக்களின் போது ஆலயச் சூழலை அலங்கரிப்பதற்காகவும் மற்றும் இந்துசமயச் சின்னமாக நந்தியின் வடிவத்தை வெளிப்படுத்துவதாகவும் இக்கொடி அமைகின்றது.*

*ஆலய பரிபாலன சபையினர் திணைக்களத்தில் ஆலயக் கடிதத் தலைப்பில் கோரிக்கையுடன் உற்சவ விஞ்ஞாபனங்களை சமர்ப்பித்து இக்கொடிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.*

*அகில இலங்கை ரீதியில் அனைத்து ஆலயங்களிற்கும் இக்கொடிகள் பரவலாகக் கிடைக்க வேண்டும் என்ற திட்டத்துடன் இச்செயற்பாடு நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இதன் மூலம் ஒரு சிறுதொகையான பெரிய, மற்றும் சிறிய நந்திக் கொடிகள் ஆலயங்களுக்கு விநியோகிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சில் உள்ள திணைக்கள நூல்கள்

திணைக்களத்தினால் இந்து சமயம், தமிழ் இலக்கியம், வரலாறு சார்ந்த அரிய நூல்கள், வருடாந்த ஆய்வரங்கக் கட்டுரைத் தொகுப்புக்கள் என்பன வெளியிடப்படுகின்றன. அந்த வகையில் இந்த ஆண்டு திருமதி. சிவானந்தினி துரைசாமி அவர்களின் ''Remembering the Hindu Traditions'' என்ற ஆங்கில நூலும், தென்கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. க.இரகுபரன் அவர்களின் ''சம்பந்தர் தேவாரமும் திறனாய்வும்'' என்னும் நூலும், ''பிரித்தானியர் ஆட்சியும் நவீன மயமாக்கமும்'' என்ற தலைப்பில் கடந்த ஆண்டு நடைபெற்ற வருடாந்த ஆய்வுக் கருத்தரங்கில் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பும் அச்சில் உள்ளன.

# இந்து இளைஞர்களுக்கான ஆன்மீக எழுச்சிப்பட்டறை

திணைக்களத்தினால் வருடாந்தம் இந்து இளைஞர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி நெறியாக 'ஆன்மீக எழுச்சிப் பட்டறை' நடாத்தப்பட்டு வருகின்றது. அந்தவகையில் இந்த வருடம் இலங்கை சின்மயா மிஷனுடன் இணைந்து கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த இளைஞர்களுக்கு முல்லைத்தீவு, வித்தியானந்தா கல்லூரியில் இப்பயிற்சியை வழங்குவதற்கான முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# அழைப்பிதழ்களுக்கான முகவரிகள்

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் கொழும்பு மாவட்டத்தில் ஏற்பாடு செய்து நடாத்தும் இந்துசமய விழாக்கள், கருத்தரங்குகள், நூல் வெளியீடுகள் மற்றும் ஏனைய வைபவங்கள் என்பவற்றிற்கான அழைப்பிதழ்களைப் பெற்றுக் கொள்ள ஆர்வமுடையோரிடமிருந்து முகவரிகளைச் சேகரித்து தரவுப்படுத்துகின்றது.

திணைக்கள அழைப்பிதழ்களைப் பெற ஆர்வமுள்ளோர் தங்களது பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், தொலைநகல் இலக்கம், மின்னஞ்சல் முகவரி ஆகிய விபரங்களைத் தெளிவாக எழுதி ''பணிப்பாளர், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 248 1/1, காலி வீதி, கொழும்பு 04'' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'அழைப்பிதழ்களுக்கான முகவரி - 2012' என்று குறிப்பிட்டு அனுப்பவும்.

மின்னஞ்சல் வசதியுள்ளவர்கள் மேற்படி விபரங்களை hindudir@yahoo.com என்ற முகவரிக்கு மின்னஞ்சல் செய்யுமாறும் வேண்டப்படுகின்றனர்.

திணைக்களத்தில் கடந்த ஆண்டு தமது முகவரிகளைப் பதிவுசெய்து கொண்டுள்ளோரும் மீண்டும் தமது விபரங்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு கோரப்படுகின்றனர்.

இதேவேளை, கொழும்பு மாவட்டத்தின் ஆலயங்கள், இந்துசமய நிறுவனங்கள் என்பவற்றின் முக்கியஸ்தர்களின் முகவரிகளையும் அறிவித்துதவுமாறு உரிய நிர்வாகத்தினரை திணைக்களம் கடிதம் மூலம் வேண்டிக்கொண்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலகங்களுக்கு நூல் பொதிகள் விநியோகம்

திணைக்களத்தால் வெளியிடப்படும் நூல்கள் பொதி செய்யப்பட்டு மாவட்டம் தோறும் பாடசாலை நூலகங்கள், பொது நூலகங்கள், சனசமூக நிலையங்கள் என்பனவற்றிற்கு ஒவ்வொரு ஆண்டும் இலவசமாக விநியோகிக்கப்பட்டு வருகின்றன. அந்தவகையில் இந்த வருடம் சுமார் 100 பொதிகள் செய்யப்பட்டு பாடசாலை நூலகங்கள், சனசமூக நிலையங்கள் ஆகியவற்றிற்கு ஏப்ரல் மாதம் 19 ஆம் திகதி திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற நிகழ்வில் வழங்கப்பட்டன.

திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி. சாந்தி நாவுக்கரசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தகைசார் பேராசிரியர் சி.பத்மநாதன், வித்துவான் திருமதி. வசந்தா வைத்தியநாதன், கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. க.இரகுபரன், திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் திரு. ம.சண்முகநாதன், கணக்காளர் ம.காண்டீபன், நிர்வாக உத்தியோகத்தர் திரு. ரி.ஜெயசோதி மற்றும் உத்தியோகத்தர்கள் அனைவரும் கலந்து சிறப்பித்தனர்.

நூற்பொதியில் அடங்கிய நூல்களின் விபரம்:

| இல. | நூலின் பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | இந்துக் கலைக்களஞ்சியம் தொகுதி-11 | 1 |
| 2 | தென்னிலங்கையின் புராதன இந்துக்கோயில்கள் | 1 |
| 3 | உருத்திரகணிகையர் | 1 |
| 4 | தண்டியலங்காரம் | 1 |
| 5 | சிவவிக்கிரகவியல் | 1 |
| 6 | தென்னிலங்கையின் புராதன இந்துக்கோயில்கள் | 1 |
| 7 | மேன்மக்கள் சரித்திரம் | 1 |
| 8 | தமிழின் நவயுகம் | 1 |
| 9 | அறநெறிக்காலமும் தமிழக பண்பாட்டு மரபுகளும் | 1 |
| 10 | வசனாலங்காரதீபம் | 1 |
| 11 | மங்கள தரிசனம் | 1 |
| 12 | சைவபோதம் | 1 |
| 13 | பண்பாடு | 1 |
| 14 | கோபுரம் | 1 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனதின் ஆற்றல்

சூழ்நிலைக்கேற்ப அனுசரிக்கப் பழகிக் கொள்ளுங்கள். அதற்காக உங்கள் நோக்கத்தைக் கைவிட வேண்டியதில்லை.

வெளிப்படையாகப் பேசுங்கள். ஆனால் முரட்டுத்தனம் வேண்டாம். துணிவுடன் இருங்கள். ஆனால் எதிர்ப்புணர்வைக் காட்டாதீர்கள். தொடர்ந்து கடுமையாக உழையுங்கள். விட்டு விட்டு உழைப்பதில் பலனில்லை.

ஏதாவது ஒன்றில் விசேஷமான திறமை பெறுங்கள். அதற்காக உங்களை குறுக்கிக் கொண்டு தெளிவை இழக்க வேண்டியதில்லை.

எழுத்திலும் பேச்சிலும் திறமையினை வளர்த்துக் கொள்ளுங்கள். வெறும் வார்த்தை ஜாலங்களில் ஈடுபடாதீர்கள்.

அடிப்படைகளையும் விவரங்களையும் தனித்தனியாகப் பிரித்துக் கொள்ளுங்கள். செயலுக்குத் திட்ட மிடுங்கள். அதேசமயம் விவரங்களை அலட்சியப்படுத்தாதீர்கள்.

மனித இனத்தில் நம்பிக்கை வையுங்கள். தன்னம்பிக்கையுடன் இருங்கள். ஏமாளியாகவோ, தலை கர்வத்துடனோ இருக்காதீர்கள்.

மனதில் சித்திரம் உருவாக்கி முன்கூட்டியே திட்டமிடுங்கள். உடனடியான எதிர்காலத்தை மறந்து நீண்ட எதிர்காலத்திற்குத் திட்டமிடாதீர்கள்.

மரியாதைக் குறைவினையோ, வெறுப்பையோ வளர்த்துக் கொள்ளாதீர்கள். வேலையை நேசியுங்கள். அதுவே முழு திருப்தியை அளிக்கும். முயற்சியை வளர்த்துக் கொள்ளுங்கள். சிறிய குழிகள் தான் பெரிய பள்ளங்களாகின்றன. துணிவுடன் நேர்மையுடன் இருங்கள். கஷ்டங்களைக் கடக்க அது உங்களுக்கு உதவும்.

- *கடவுள் இருக்கிறார். காரியமில்லாமல் உலகத்தில் ஒன்றும் நிலைத்திருக்காது. அவனைத் தேடி ஆனந்தமடை.*
- *மற்றவர்க்குத் துன்பம் கோரிப் பிரார்த்திப்பவன் தனக்கு ஒரு சாபத்தை யாசிக்கிறான்.*
- *பலன் வாழ்க்கை நரகத்துக்கு இட்டுச் செல்கிறது. திவ்ய வாழ்க்கை அமரத்துவத்திற்கு அழைத்துச் செல்கிறது.*
- *பேராசையே துன்பத்தின் வேர். குழப்பமும் அழிவும் அதன் விளைவுகள்.*
- *ஒருபொழுது மனம் நிம்மதியாகவும் மற்றச் சமயம் துன்பமாகவும் இருக்கிறது. அதற்கு இடங் கொடாதே. அமைதியாயிரு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை எழுத்தாளர்களின் நூல்கள் கொள்வனவு

இலங்கை எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் முகமாக அவர்கள் எழுதிய நூல்கள் திணைக்களத்தினால் கொள்வனவு செய்யப்படுகின்றன. இவ் ஆண்டு நாடளாவிய ரீதியில் ஜனவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரை உள்ளூர் எழுத்தாளர்கள் 29 பேரிடமிருந்து சமயம், இலக்கியம், கவிதை, வரலாறு தொடர்பான 933 நூல்கள் ரூபா 210,206/- க்கு கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. கொள்வனவு செய்யப்பட்ட நூல்களின் விபரம்:

இவை நூற்பொதிகளாக்கப்பட்டு பொது நூலகங்களுக்கு வழங்கப்படுகின்றன.

| நூல்கள் | ஆசிரியர் | நூல்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. மல்லிகை | டொமினிக் ஜீவா | 25 |
| 2. தமிழியல் சார் சிந்தனைத்துளிகள் | எஸ்.சுசீந்திரராசா | 13 |
| 3. அறுவடைக் கனவுகள் | அல் அஸுமத் | 10 |
| 4. மனநிறைவாக வாழ்வோம் | கே.வைத்தீஸ்வரன் | 23 |
| 5. ஜனமித்திரன் கட்டுரைகள் சீ | .நல்லையா (சாரல் நாடன்) | 21 |
| 6. குருதி தோய்ந்த காலம் | யூ.எல்.ஆதம்பாவா | 21 |
| 7. ஆரண்ய பிரசாதம் மலர் - 03 | ஆ.இரகுபதி பால ஸ்ரீதரன் | 30 |
| 8. தேவீ மஹாத்மியம் | ஆனந்த குமார சர்மா | 50 |
| 9. ஏடுகளில் திறனாய்வு | கே.எஸ்.சிவகுமாரன் | 31 |
| 10. சுவையான இலக்கியத் திறனாய்வுகள் | கே.எஸ்.சிவகுமாரன் | 31 |
| 11. தமிழ் இலக்கியக் களஞ்சியம் | த.துரைசிங்கம் | 15 |
| 12. பல்துறை அறிவுக் கலசம் | வீ.டி.வேலாயுதப்பிள்ளை | 44 |
| 13. அறிவுக் களஞ்சியம் | இ.சிறீஸ்கந்தராசா | 35 |
| 14. உயிரோவியம் | எஸ்.மதன் | 30 |
| 15. எதிர்க்காற்று | எம்.பாலசிங்கம் | 17 |
| 16. கருட புராணம் | என்.முருகையா | 41 |
| 17. அரசியல் சிந்தனைத்துவமும் சமூக இருப்பும் | எம்.எம்.எம்.நூறுல் ஹக் | 25 |
| 18. கலை ஞானம் | நல்லூர் பிரதேச கலாசார பேரவை | 12 |
| 19. யாழ் மண்ணில் சைவமும் தமிழும் வளர்த்த சான்றோர்கள் | இணுவில் சைவத் திருநெறிக் கழகம் | 83 |
| 20. விபுலானந்தர் காவியம் | எஸ்.சிவலிங்கம் | 20 |
| 21. இருபாலைச் சேனாதிராய முதலியார் | யோகேஸ்வரி சிவப்பிரகாசம் | 20 |
| 22. தீரன் திப்புசுல்தான் காவியம் | ஏ.ஜே.ஷரிபுதீன் | 12 |
| 23. அங்கயற்கண்ணியும் அவள் அழகிய உலகமும் | எஸ்.பிரேமினி | 20 |
| 24. ஒரு தென்னை மரம் | ஏ.எம்.எம்.அலி | 17 |
| 25. கனவுகளுக்கு மரணம் உண்டு | ஈ.நஸ்புல்லாஹ் | 13 |
| 26. திருவாசகம் | சிவதொண்டன் சபை | 76 |
| 27. பெரிய புராண வசனம் | சிவதொண்டன் சபை | 64 |
| 28. சிவஞான சித்தியார் சுபக்கம் | சிவதொண்டன் சபை | 50 |
| 29. சைவத்திருமுறை திரட்டு | சிவதொண்டன் சபை | 100 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமய பொது அறிவுப் போட்டிப் பரீட்சை - 2011

மாணவர்கள் மத்தியில் இந்து சமயத்தின் அறிவை மேம்படுத்தும் பொருட்டு ஆண்டு தோறும் திணைக்களத்தினால் அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்காக இந்து சமயத்தில் பொது அறிவுப் போட்டிப் பரீட்சை நடத்தப்பட்டு வருகின்றது. இதன் முகமாக 2011 ஆம் ஆண்டும் அகில இலங்கை ரீதியாக 89 பரீட்சை நிலையங்களில் 10.07.2011 அன்று இந்து சமய பொது அறிவுப் போட்டிப் பரீட்சை நடைபெற்றது. இதில் 48,750 மாணவர்கள் விண்ணப்பித்திருந்த போதிலும் சுமார் 25,000 மாணவர்களே பரீட்சை எழுதினார்கள்.

இப்பரீட்சை இரண்டாம் வகுப்பு தொடக்கம் பதினொராம் வகுப்பு வரை வகுப்பு ரீதியாக எழுத்துப் பரீட்சையாக நடைபெற்றது. இதில் தேசிய மட்டத்தில் 17 மாணவர்கள் முதலாம் இடத்தினையும், 11 மாணவர்கள் இரண்டாம் இடத்தினையும், 8 மாணவர்கள் மூன்றாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டார்கள். மாவட்ட மட்டத்தில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களை 279 மாணவர்கள் பெற்றுக் கொண்டார்கள். இவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் வைபவம் 13.12.2011 அன்று பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெற்றது.

பரிசளிப்பு நிகழ்வுக்கு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி. சாந்தி நாவுக்கரசன் தலைமை வகித்தார். இந்நிகழ்வில் பிரம்மஸ்ரீ கா.வைத்தீஸ்வரக்குருக்கள் கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் சுவாமி ஸ்ரீமத் இராஜேஸ்வரானந்தா மஹராஜ், கொழும்பு சாரதாசமித்தி ஆத்மதேவப் பிராண மாதாஜீ ஆகியோர் உரை நிகழ்த்தினார்கள். நாவற்குடா இந்து கலாசார நிலைய நடன வகுப்பு மாணவிகளது ''கண்ணன் நடனம்'', மன்னார் ஸ்ரீமுருகன் அறநெறிப்பாடசாலை மாணவர்களது ''பாம்பு நடனம்'' ஆகியவை சிறப்புக்கலை நிகழ்ச்சிகளாக இடம்பெற்றன. இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள அறநெறிப் பிரிவு உதவிப் பணிப்பாளர் திருமதி. ஹேமலோஜினி குமரன் அவர்களது நன்றியுரையுடன் நிறைவு பெற்ற இவ்விழாவில் அறநெறிப்பாடசாலை பொறுப்பாசிரியர்கள், அதிபர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் என 1500 பேர் கலந்துகொண்டனர்.

மாவட்ட மட்டத்தில் முதற் பரிசு பெற்றவர்களில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களுக்கு வகுப்பு ரீதியாக முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களுக்குத் தெரிவு செய்து தேசிய மட்டப் பரிசில்கள் வழங்கப்பட்டன. தேசிய மட்டத்தில் முதலாம் இடம்பெற்றவருக்கு ரூபா 5000/= பணப்பரிசும் வெற்றிக் கேடயமும் சான்றிதழ்களும், இரண்டாம் இடம்பெற்ற மாணவர்களுக்கு ரூபா 4000/= பணப்பரிசும், வெற்றிக் கேடயமும், சான்றிதழ்களும், மூன்றாம் இடம் பெற்றவருக்கு ரூபா 3000/= பணப்பரிசும் வெற்றிக் கேடயமும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

ஒவ்வொரு வகுப்பிற்கும் மாவட்ட ரீதியாக அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கு மாவட்ட மட்டத்தில் முதலாம் இடமும், அடுத்த நிலையில் கூடிய புள்ளிகளைப் பெற்றவர்கள் இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றனர். இவர்களில் முதலாம் இடம்பெற்றவர்களுக்குத் தலா ரூபா 3000/=வும், இரண்டாம் இடத்தினைப் பெற்றவர்களுக்கு ரூபா 2000/=வும், மூன்றாம் இடங்கள் பெற்றவர்களுக்கு ரூபா 1000/=வும் பணப்பரிசில்களாக வழங்கப்பட்டன. அத்துடன் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

இப்போட்டியில் பரீட்சையில் நாற்பது புள்ளிகளுக்கு மேல் எடுத்த சகல அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. 40 புள்ளிகள் தொடக்கம் 54 வரையிலான புள்ளிகள் பெற்ற மாணவர்களுக்கு சாதாரண சித்திக்கான சான்றிதழ்களும், 55 தொடக்கம் 74 புள்ளிகள் வரை பெற்ற மாணவர்களுக்கு விசேட சித்திக்கான சான்றிதழ்களும், 75 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்களுக்கு அதிவிசேட சித்திக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன. சுமார் 10,500 மாணவர்கள் சான்றிதழ்கள் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தேசிய மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர் விபரம்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வகுப்பு 2

| இல. | பெயர் | அறநெறிப்பாடசாலையின் பெயர் | மாவட்டம் | இடம் |
|---|---|---|---|---|
| 1 | என்.அருண் | இராமகிருஷ்ண மிஷன் அ.நெ.பா. | கொழும்பு | 1 |
| 2 | ரி.அக்ஷிகா | இராமகிருஷ்ண மிஷன் அ.நெ.பா. | கொழும்பு | 1 |
| 3 | ப.அவினேஷ் | வடகொழும்பு இந்து பரிபாலன சங்கம் அ.நெ.பா. | கொழும்பு | 1 |
| 4 | ப.தனுலாபவன் | இந்து சமயவிருத்திச் சங்கம் அ.நெ.பா. | மட்டக்களப்பு | 1 |
| 5 | பி.நித்யசாயினி | வாணி அ.நெ.பா. | மட்டக்களப்பு | 1 |
| 6 | ஜெ.அபிஷிகா | நெல்லண்டை அம்மன் அ.நெ.பா. | யாழ்ப்பாணம் | 1 |

## வகுப்பு 3

| இல. | பெயர் | அறநெறிப்பாடசாலையின் பெயர் | மாவட்டம் | இடம் |
|---|---|---|---|---|
| 1 | ச.டிருக்ஷிகா | வாணி அ.நெ.பா. | மட்டக்களப்பு | 1 |
| 2 | வி.டிலக்ஷிகா | வீரகத்திப்பிள்ளையார் அ.நெ.பா. | முல்லைத்தீவு | 1 |
| 4 | கி.பிரணவன் | இராமகிருஷ்ண மிஷன் அ.நெ.பா. | கொழும்பு | 2 |
| 5 | ம.கேஸ்மிகா | இராமகிருஷ்ண மிஷன் அ.நெ.பா. | மட்டக்களப்பு | 2 |

## வகுப்பு 4

| இல. | பெயர் | அறநெறிப்பாடசாலையின் பெயர் | மாவட்டம் | இடம் |
|---|---|---|---|---|
| 1 | சி.சர்மிக்கா | விபுலானந்தா அ.நெ.பா. | மட்டக்களப்பு | 1 |
| 2 | க.குகானிஷன் | ஸ்ரீ சிவசுப்பிரமணியம் அ.நெ.பா. | மட்டக்களப்பு | 1 |
| 1 | ஜெ.சனுஷா | காட்டடி விநாயகர் அ.நெ.பா. | முல்லைத்தீவு | 2 |
| 1 | ஜெ.ரிதுர்சிகா | மானிப்பாய் மருதடி அ.நெ.பா. | யாழ்ப்பாணம் | 2 |

- *சமதிருஷ்டி அறிவாகிறது.*
- *இச்சையும் விருப்பமுஞ் சாந்தியின் அறிவின் எதிரிகள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வகுப்பு 5

| இல. | பெயர் | அறநெறிப்பாடசாலையின் பெயர் | மாவட்டம் | இடம் |
|---|---|---|---|---|
| 1 | என்.ஆதிரை | இராமகிருஷ்ணா அ.நெ.பா. | கொழும்பு | 1 |
| 2 | இ.கஜீந்திரன் | இராமகிருஷ்ணா அ.நெ.பா. | கொழும்பு | 2 |
| 3. | யோ.சோமிக்கா | ஆலையடி பிள்ளையார் அ.நெ.பா. | அம்பாறை | 3 |

## வகுப்பு 6

| இல. | பெயர் | அறநெறிப்பாடசாலையின் பெயர் | மாவட்டம் | இடம் |
|---|---|---|---|---|
| 1 | தி.மணிமோகன் | கணேசா அ.நெ.பா. | யாழ்ப்பாணம் | 1 |
| 2 | க.சோபனா | அன்பு அ.நெ.பா. | திருகோணமலை | 2 |
| 3 | பா.சோனியா | வடகொழும்பு இந்து அ.நெ.பா. | கொழும்பு | 3 |

## வகுப்பு 7

| இல. | பெயர் | அறநெறிப்பாடசாலையின் பெயர் | மாவட்டம் | இடம் |
|---|---|---|---|---|
| 1 | ம.சுரேகா | சைவமகாசபை அ.நெ.பா. | மட்டக்களப்பு | 1 |
| 2 | வி.ஜெயதுர்க்கா | வித்திய ஸ்ரீ கலை அ.நெ.பா. | மட்டக்களப்பு | 2 |
| 3 | எஸ்.செந்தூரன் | இராமகிருஷ்ணா அ.நெ.பா. | கொழும்பு | 3 |

## வகுப்பு 8

| இல. | பெயர் | அறநெறிப்பாடசாலையின் பெயர் | மாவட்டம் | இடம் |
|---|---|---|---|---|
| 1 | ஜெ.பிரியதர்ஷினி | வேதவியாசர் அ.நெ.பா. | இரத்தினபுரி | 1 |
| 2 | ச.துலாரி | வேதவியாசர் அ.நெ.பா. | இரத்தினபுரி | 2 |
| 3 | ச.வாணி | சரோஜினி அ.நெ.பா. | இரத்தினபுரி | 3 |

- *முதல் பார்வையிலேயே மனிதர்களையும் பொருள்களையும் பற்றி தீர்மானத்துக்கு வந்து விடாதே.*
- *சிறு அவதானமின்மை பெரிய தவறுக்கு இட்டுச் செல்லலாகும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வகுப்பு 9

| இல. | பெயர் | அறநெறிப்பாடசாலையின் பெயர் | மாவட்டம் | இடம் |
|---|---|---|---|---|
| 1 | வே.குமுதாயினி | இராமகிருஷ்ணா அ.நெ.பா. | கொழும்பு | 1 |
| 2 | ம.கிருஷிகா | ஸ்ரீ கருமாரியம்மன் அ.நெ.பா. | வவுனியா | 2 |
| 3 | க.சர்ஜனன் | இணுவில் கந்தசுவாமி கோயில் இளந்தொண்டர் சபை அ.நெ.பா. | யாழ்ப்பாணம் | 3 |
| 4 | கே.தனுஜா | ஸ்ரீமுருகன் அ.நெ.பா. | மன்னார் | 3 |

## வகுப்பு 10

| இல. | பெயர் | அறநெறிப்பாடசாலையின் பெயர் | மாவட்டம் | இடம் |
|---|---|---|---|---|
| 1 | கு.கார்த்திகா | இந்து இளைஞர் மன்ற அ.நெ.பா. | கம்பஹா | 1 |
| 2 | ஏ.மனோஜன் | ஸ்ரீ மகா மாரியம்மன் அ.நெ.பா. | மட்டக்களப்பு | 2 |
| 3 | சி.சிவதாரிணி | திருமுருகன் அ.நெ.பா. | திருகோணமலை | 3 |

## வகுப்பு 11

| இல. | பெயர் | அறநெறிப்பாடசாலையின் பெயர் | மாவட்டம் | இடம் |
|---|---|---|---|---|
| 1 | ம.தர்சினி | ஸ்ரீ முத்து விநாயர் ஆலய அ.நெ.பா. | மட்டக்களப்பு | 1 |
| 2 | பா.தனோஜன் | ஸ்ரீ முத்துமாரி அ.நெ.பா. | அம்பாறை | 2 |
| 3 | க.வேணு | ஸ்ரீ முத்துமாரி அ.நெ.பா. | அம்பாறை | 3 |

- *ஒரு தடவை சந்தர்ப்பத்தை இழக்கவிட்டாயானால் மறுமுறை அதைப் பெறுவது அரிது.*
- *அன்பே இவ்வுலகத்தின் மாபெருஞ் சக்தி. அதுவே ஆத்ம சக்தி. அதை வளர்ப்பாயாக.*
- *மயக்குபவைகளைத் தடுத்து நிறுத்து. அகமுக வாழ்வைக் கொள். எல்லாத் துன்பங்களும் முடிவுபெறும். நீ தோல்வியுற்றாலும் வெற்றிக்கு ஒருபடி சமீபிக்கிறாய். செல்; மேலுஞ்செல்.*
- *மற்றவர்களைப் பற்றி அறிந்துகொள்ள வேண்டும் என்ற குணம் அமைதியின்மையை உண்டாக்குகிறது. அதைத் திருத்தி அமைத்துக்கொள்; அமைதி உன்னுடையதே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து கட்டடக்கலை சிற்பக்கலைப் பயிலரங்கு

வருடந்தோறும் திணைக்களத்தினால் பல்கலைக்கழக மாணவர்களுக்கென வழங்கப்படும் கட்டடக் கலை சிற்பக்கலைப் பயிலரங்கு இவ்வாண்டு மே மாதம் 10 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை பத்து நாட்களுக்கு திணைக்கள கேட்போர் கூடத்தில் நடத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட் டுள்ளன. இப்பயிலரங்கை தமிழகப் பல்கலைக்கழக பேராசிரியர் மூவரும், இலங்கைப் பல்கலைக்க ழகப் பேராசிரியர் சிலரும் இணைந்து வழங்கவுள்ளனர்.

# அரச பாடசாலைகளில் இந்து சமயம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு

அரச பாடசாலைகளில் இந்து சமயம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கென கடந்த ஆண்டு முதல் திணைக் களத்தினால் பயிற்சிக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன. அந்த வகையில் இந்த ஆண்டு வவுனி யா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு எதிர்வரும் மே மாதம் 28 ஆம் திகதி தொடங்கி 30 ஆம் திகதி வரை மூன்று நாட்களுக்கு வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் மன்ற மண்டபத்தில் வதிவிடக் கருத்தரங்காக நடைபெறவுள்ளது.

# அந்தணரல்லாத இந்துக் குருமார்களுக்கான பூசகர் பயிற்சி (முல்லைத்தீவு)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வருடந்தோறும் ஒழுங்கு செய்து நடாத் தப்படும் அந்தணரல்லாத இந்து பூசகர்களுக்கான இரண்டு வாரகால வதிவிடப் பயிற்சி இவ்வாண்டு எதிர்வரும் ஜுன் மாதம் 11 ஆம் திகதி முதல் தொடர்ந்து 15 தினங்களுக்கு வதிவிடப் பயிற்சியாக முல் லைத்தீவு, முள்ளியவளை, வற்றாப்பளை கண்ணகியம்மன் ஆலய மண்டபத்தில் நடாத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திணைக்களத்தின் அழைப்பின் பேரில், இப்பயிற்சியை வழங்குவதற்காக தமிழகக் கிராமக் கோவில் பூசாரிகள் பேரவையைச் சேர்ந்த விரிவுரையாளர்கள் வருகை தரவுள்ளனர்.

- *கடவுளிடம் பூரண நம்பிக்கைகொள். கவலைகளையுஞ் சஞ்சலங்களையும் விட்டுவிட்டுப் பூரண சௌக்கியத்தில் இரு.*
- *அற்ப ஜனங்கள், மற்றவர்களுடைய கஷ்டங்ளை அவர்களை மேலுந் துன்புறுத்துவதற்கு உபயோகிக்கிறார்கள். ஆனால், தங்கள் தவறை உணர்ந்து வருந்துங் காலம் ஒன்று நிச்சய மாக வரும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திணைக்கள ஆய்வு நூலகம்

முன்னாள் அமைச்சர் கௌரவ செ.இராசதுரை அவர்கள் 1982 ஆம் ஆண்டு முதலாம் அகில உலக இந்து மாநாட்டை நடாத்திய போது அவர் மனதில் உதயமாகிய சிந்தனையின் வெளிப்பாடாக உலக இந்து ஆராய்ச்சி நிலையம் என்ற பெயரில் ஓர் நூலகம் உருவாக்கப்பட்டது. 01.01.1986 ஆம் ஆண்டு முதல் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஆராய்ச்சிப் பிரிவில் இந்நூலகம் ஓர் ஆய்வு நூலகமாக வளரத் தொடங்கியது. தற்போது தமிழ், ஆங்கில நூல்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 10,000 ஆகவுள்ளது. நூல்கள் யாவும் துவியின் தசாம்ச பகுப்பாக்கம் (D.D.C) முறையில் பகுப்பாக்கம் செய்யப்பட்டு அதற்கேற்ற முறையில் ஒழுங்குபடுத்தி வைக்கப்பட்டுள்ளது.

தத்துவம், சமயம், சமூகவியல், மொழியியல், விஞ்ஞானம், தொழில்நுட்பம், நுண்கலைகள், இலக்கியம், வரலாறு என எல்லாத் துறைகளிலும் நூல்கள் இருந்தாலும் குறிப்பாக சமயம், இலக்கியம் அதனுடன் தொடர்பான புத்தகங்களே அதிகமாக இருக்கின்றன.

இவ்வாய்வு நூலகம் வாரநாட்களில் காலை 9.00 மாலை 4.00 வரை திறந்திருக்கும். நூலகத்திற்கு என (membership) அங்கத்துவம் கிடையாது. நூல் நிலையத்தை பயன்படுத்த விரும்பும் வாசகர்கள் வந்து நூல்களைப் படிக்கலாம். ஆய்வு நூலகமாக இருப்பதால் நூல்களை வெளியில் எடுத்து செல்வதற்கு அனுமதியில்லை. எனினும் நூல்களை வாசிக்க விரும்பும் வாசகர்கள் கிழமை நாட்களில் எமது நூலகத்தை பயன்படுத்த முடியும்.

- *நல்லதை நினை; நல்லதை பேசு; நல்லதைச் செய். அழியாத ஆனந்த உலகத்தை நீ சீக்கிரம் அடைவாய்.*
- *உனது வாழ்க்கையின் பெரும்பொழுதை வீணாக்கிவிட்டாய். சிறிது காலமே மிஞ்சியிருக்கிறது. அதை நன்றாகப் பயன்படுத்திக்கொள்; நீயுங் கடவுளை அடைந்த ஆனந்தமடையலாம்.*
- *உன்னிடத்திலிருக்குங் கீழ்மையை வெற்றி கொள்; உண்மையும் நீதியும் உனது வாழ்க்கையை நடத்தட்டும்.*
- *சாந்தமாக ஆனால், உறுதியாக, மிருதுவாக ஆனால், துணிச்சலாக, பணிவாக ஆனால் தைரியமாக, எளிமையாக ஆனால், கண்ணியமாக இரு.*
- *கடவுளிடம் வசிப்பதற்கு உன்னைச் சிதைத்துக் கொள்ளவும் வேண்டியிருக்கும். வாழ்வதற்காக இற.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைகாசி விசாகம்

இருபத்தேழு நட்சத்திரங்களில் விசாகம் ஒன்றாகும். வைகாசி மாதத்தில் பூர்வபட்சத்தில் விசாக நட்சத்திரம் கூடி வரும் நாளே இந்த வைகாசி விசாக நாளாகும். இந்நாளில் பூரணையும் சேர்ந்து கூடி வருமாயின் அதி விசேடமாகும். வைகாசி விசாகப் பூரணை நாளில் சிலர் பொங்கல் படைத்து வழிபடுவர். இத்தினத்தில் அநேக ஆலயங்களில் உற்சவங்கள் நடைபெறுகின்றது.

மேலும், சிவனின் நெற்றிக் கண்ணிலிருந்து வெளிப்பட்டு சரவணப் பொய்கையில் தீப்பொறிகளாயிருந்து கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரெண்டும் கொண்டு ஒரு திருமுருகன் ஆறுமுகப் பெருமானாக அவதரித்த நாளும் இதுவே. அதனால் முருகப்பெருமானுக்கு விசாகன் என்றொரு பெயருமுண்டு. குமரகுருபரர் முதல் பலர் இதனை வியந்து போற்றியுள்ளார்கள்.

வைகாசிப் பூரணையுடன் இணைந்தே பெரும்பாலும் வரும் வைகாசி விசாகத் திருநாளில் பகலில் சூரியனும் இரவில் பூரணைச் சந்திரனும் ஒளி வீசி இருளகற்ற, முழு நாளும் இரவில்லாத பகலாக பூரணை முழுமதி நாள் விளங்குகின்றது. இத்தகைய நன்னாளை மக்கள் தூக்கத்திலும், சோம்பலிலும் வெறிதே கழிக்கக்கூடாதென்று எண்ணிய நம் முன்னோர், கடவுள் வழிபாடு, கடவுட் சிந்தனை, நல்ல கருமங்களைச் செய்தல் போன்றவற்றில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார்கள்.

இத்தினத்தில் வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் பொங்கல் பெருவிழா சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. வைகாசிப் பூரணையை இறுதி நாளாகக் கொண்டு விநாயகர், முருகன், அம்பாள் ஆலயங்களில் மகோற்சவங்கள நடைபெறுகின்றன. வருடாந்த குளிர்த்தி சடங்கு என்பன மட்டக்களப்பு பிரதேசத்தில் கண்ணகி மற்றும் அம்பாள் ஆலயங்களில் வைகாசி விசாகத்தை முன்னிட்டு நிகழ்த்தப்படுகின்றன. இவ்வாறு வைகாசி விசாகத் திருநாள் சைவ மக்களுக்கு மிக முக்கியத்துவம் வாய்ந்த புனித நாளாக விளங்குகின்றது.

# ஆனி உத்தரம்

ஆனி மாதம் முதுவேனிற் காலத்தின் உக்கிரமான காலமாகும். பங்குனி உத்தரம் சிவபெருமானுடைய திருமணத்தினால் விசேடம் உற்றது போன்று ஆனி உத்தரம் சிதம்பரம் நடராஜர் தரிசனத்தினால் விசேடம் பெற்றது. தில்லைச் சிதம்பரநாதனும் சிவகாமி அம்மையும் தேரேறி வீதியுலா வரும் நாட்களாக மார்கழி திருவாதிரையும், ஆனி உத்தரமும் விளங்குகின்றன. இரதோற்சவத்தின் மறுநாட்காலை அம்மை அப்பனின் திவ்யதரிசனம் இடம்பெறும். இத்தினத்தில் சகல ஆலயங்களிலும் விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெறும்.

**எப்பொழுதும் யோகம் பயில்; தெய்வீக ஒளி இறங்குவதைக் காண்பாய். உனது தியானத்தில் தவறாமல் இரு. எல்லாக் குறைபாடுகளும் தானே அழியும். கெட்ட குணங்களையும் மற்றக் குறைகளையும் ஒழிக்கும் நிச்சயமான தீவிரமான வழி தியானமே.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடி அமாவாசை

ஆடி அமாவாசை தர்ப்பண பூஜை - மண்ணுலகை விட்டு விண்ணுலகெய்தி சிவபதம் அடைந்த சகல ஆன்மாக்களுக்கும் செய்யப்படும் பூஜை ஆகும். இந்த வருடம், எதிர்வரும் ஜீலை 30ம் திகதி (சனிக்கிழமை) ஆடி அமாவாசை தர்ப்பண தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

ஆன்மாக்கள் மோட்சகதி அடைந்து இறைவன் அடி சேர்ந்தபின் எமது வாழ்க்கையில் நடக்கும் துன்பங்கள் தொடராமல் இன்பங்'கள் பெருகி வளமான வாழ்வு வாழ்வதற்கு ஆன்மாக்களின் ஆச-ீர்வாதம் எப்போதும் வேண்டும்.

சீரும் சிறப்பும் பெற்று நாம் வாழ்வதிலும் நோய் நொடி இன்றி சுகத்துடன் இருப்பதற்கும் எத்துறையிலும் முன்னேற்றம் காண்பதற்கும் ஆடி அமாவாசை தினத்தன்று ஆத்மதர்ப்பணம் செய்து அவர்களை நினைவு கூற வேண்டும்.

முக்கியமாக தாய் தந்தையர்களை இழந்தவர்கள் இதில் பெரும் பங்கெடுத்து கடமைகளை செய்ய வேண்டும். மற்றும் தாத்தா, பாட்டி, மாமனார், மாமியார் சுற்றத்தவர்கள் என எம்மை விட்டு அமரர்களாகிய அனைவருக்கும் இது போற்றி வணங்கத்தக்க நாளாகும்.

அப்பா அம்மா உறவுகள் என அனைவர்க்கும் நீத்தார் கடன் செய்யத் தவறியவர்கள், சந்தர்ப்பவசத்தால் செய்ய முடியாதவர்கள், இறந்த காலங்களில் ஒருமாத கால முடிவில் தீட்டு துடக்கு முடிந்த பின் பிதிர்கடன் செய்ய முடியாதவர்கள், இந்த ஆடிஅமாவாசை நாளில் ஒவ்வொரு வருடமும் தர்ப்பணம் செய்தல் அவசியமாகும்.

### பிதிர்க்கடனுக்கு பிரசித்தி பெற்ற கீரிமலை நகுலேஸ்வர தீர்த்தம்

மனிதர்களாகிய நாம் பெற்றகடன்கள் பலவாகும். அவற்றுள் மூன்று கடன்கள் பெரும் கடன்களாக கருதப்படுகின்றது. அவையாவன தேவர்கடன், முனிவர்கடன், பிதிர்க்கடன் என்பவையாகும். தேவர்கடன் இறைவனை வழிபடுத்துவதாலும்? முனிவர்கடன் வேதம் ஓதுதலாலும், திருமுறை பாராயணம் (தேவாரம் திருவாசகம்) பாடுவதாலும், பிதிர்க்கடன் இறந்த ஆன்மாக்களை நினைத்து எள்ளும் தண்ணீரும் இறைத்து தர்ப்பணம் செய்தல் மூலமாகவும் இக்கடன்கள் தீர்க்கப்படுகின்றன. நீத்தார்கடன் எனப்படும் பிதிர்க்கடனை தீர்க்கவும், இக்கடமையை செய்ய ஏற்ற நாளாகவும் வருவது இந்த ஆடி அமாவாசை தினமாகும்

### கேரளாவில் ஆத்ம தர்ப்பணம்

சூரியனும் சந்திரனும் சேர்ந்திருக்கக் கூடிய நாளாகிய இவ் அமாவாசை திகதியன்று காலையில் கடலில், நதியில், ஆற்றில் மூழ்கி குளித்து அல்லது வீடுகளில் குளித்து சுத்தமான ஆடை அணிந்து விபூதி பூசி, பொட்டு வைத்து, ஆலயம் சென்று சிவன் தரிசனம் செய்து ஆலய குருவின் வழிகாட்டலில் முதலில் தர்ப்பை கையில் அணிந்து சங்கல்பம் செய்து, அமரத்துவம் அடைந்தவர்கள் பெயர் / நாமங்களை குருவிடம் சொல்லவேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிதிர்கடனுக்கு பிரசித்தி பெற்ற இராமேஸ்வரம் இராமநாதசுவாமி கோயில் சேதுக்கடல் அக்கினி தீர்த்தம்

இறந்த தாய் தந்தையர் அவர்கள் பெயர்களை முதலில் சொல்லி பின்பு தாத்தா பாட்டி தலைமுறை செல்லி அதன் பின் ஏனைய உறவினர் நண்பர்கள் இறந்திருந்தால், அவர்கள் பெயர்களும் சொல்லி எள்ளும் தண்ணீரும் சேர்த்து இறைத்து தர்ப்பணம் செய்து அவர்கள் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்தனை செய்ய வேண்டும். அதன்பின் மோட்சதீபம் ஏற்றி இறைவனை வழிபட்டு அர்ச்சனை செய்து ஆராதிக்க வேண்டும்.

எள்ளு நீருடன் தர்ப்பைப்புல் நுனியால் இறைத்து விடுவதால் திருப்தி அடைவார்கள். தர்ப்பணம் என்பது திருப்திப்படுத்துதல் என்று பொருள்படும்.

பகவான் விஷ்ணுவின் தேகத்தில் இருந்து வெளிப்பட்டதும் சகல பாபங்களையும் தீர்க்க வல்லதும் ஆகிய எள்ளும், தாகத்தை தீர்க்கும் நீரும், கொண்டு தர்ப்பணம் செய்து பிதிரின் ஆசியையும் குருவின் ஆசியையும் பெற வேண்டும். பின் குருவிற்கும் தானம் வேட்டி சால்வை அரிசி காய்கறி குரு தட்சணை வழங்கி ஆசீர்வாதம் பெறவேண்டும்.

வீட்டில் அமரர்கள் படத்தின் முன்பு சைவமாக சமைத்து, வாழை இலை உணவு படைத்து கற்பூர ஆராதனை செய்து வணங்கி உறவினருடன் கூடி மதியபோஷனம் உண்ணவேண்டும்.

ஆகவே இறைபதம் எய்திய ஆத்மாக்களுக்கு ஆத்ம தர்ப்பணம் செய்ய இந்நாளை பயன்படுத்தி இறையருளை பெறுங்கள்.

- *உலகத்தில் நீ வாழலாம்; ஆனால், லௌகிகம் புகுந்தால் நீ அதோகதிதான்.*
- *ஒரு கெட்ட குணத்தை அகற்றச் சிறந்த வழி, அதற்கு எதிரான நல்ல குணத்தை நினைப்பதுதான்.*
- *கோபத்தை அன்பினாலும் ஆசைகளைத் தூய்மையினாலும் பேராசையைத் தாராள மனப்பான்மையினாலும் கர்வத்தைப் பணிவாலும் அகங்காரத்தை இறைவனது சரணாகதியினாலும் வெற்றி கொள். உன்னிடம் இறைமை மிளிரும்.*
- *பொறாமை, துவேஷம், சந்தேகம், பழிவாங்கும் மனோபாவம், பெருமை, சுயநலம் முதலிய களைகளை அகற்றி அன்பை உனது இதயப் பூங்காவிலே பயிரிடு. அன்பின் சக்தி சொல்லில் அடங்காதது. அன்பின் ஆழம் அளக்க முடியாதது. அதனுடைய புகழோ வர்ணிக்க இயலாதது. அது தெய்வீகமானது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# திணைக்களத்திற்கு கிடைக்கப் பெற்ற நூல்கள்

நாட்டின் பல பாகங்களையும் சேர்ந்த இந்துசமய அமைப்புகள் ஆன்மீக சஞ்சிகைகள் மற்றும் ஆன்மீக மேம்பாடு கருதிய நூல்கள் பலவற்றை வெளியிட்டு வருகின்றன. அங்ஙனம் வெளியிடப்படும் நூல்களில் திணைக்களத்திற்கு அண்மையில் கிடைத்த நூல்களின் விபரம் வருமாறு:

## யாழ் மண்ணில் சைவமும், தமிழும் வளர்த்த சான்றோர்கள்

இணுவில் சைவத்திருநெறிக் கழகத்தின் வெளியீடாக ***யாழ் மண்ணில் சைவமும், தமிழும் வளர்த்த சான்றோர்கள்*** என்ற பெயரில் நூல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

இந்நூலில் கடந்த நூற்றாண்டில் இருந்து அண்மைக்காலம் வரை சைவமும் தமிழும் வளர்க்க அரும் பணி புரிந்த யாழ்ப்பாண பிரதேசத்தினைச் சேர்ந்த இருபத்தியேழு பேரின் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. இப்பெரியோர்களைப் பற்றி அறிந்து கொள்ள விரும்பும் மாணவர்களுக்கும், வாசகர்களுக்கும் இந்நூல் பெரும் பயன் உள்ளதாக அமையும். நூலின் விலை ரூ. 300/- ஆகும்.




தொடர்புகளுக்கு:

தலைவர் / செயலாளர்,

இணுவில் சைவத்திருநெறிக் கழகம்,

இணுவில்,

யாழ்ப்பாணம்.

## சக்கரம்

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானத்தின் வெளியீடாக ***சக்கரம்*** என்னும் கலை இலக்கிய ஆன்மீக சஞ்சிகை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. வைஷ்ணவ சமயப் பிரிவைச் சார்ந்த கட்டுரைகள் இவ்விதழில் இடம்பெற்றுள்ளன.




தொடர்புகளுக்கு:

தலைவர் / செயலாளர்,

பெரியாழ்வார் ஆச்சிரமம்,

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயம்,

துன்னாலை,

பருத்தித்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவானந்தம்

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தின் வெளியீடாக *சிவானந்தம்* எனும் சஞ்சிகை வெளியிடப் பட்டுள்ளது. இந்து குருமாருக்கு உதவத்தக்க கட்டுரைகளும் தகவல்களும் இச்சஞ்சிகையில் இடம்பெற் றுள்ளன.




தொடர்புகளுக்கு:

தலைவர் / செயலாளர்,

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்,
பருத்தித்துறை வீதி,

ஆனைப்பந்தி,

யாழ்ப்பாணம்.

## பல்துறை அறிவுக் கலசம்

யோகாசன ஆசிரியர் வி.ரி.வேலாயுதம் என்பவரின் வெளியீடாக *பல்துறை அறிவுக் கலசம்* என்னும் நூல் அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூலில் யோகாசனங்களின் பயன்கள், தியானப் பயிற்சி, மூலிகை வைத்தியம், விரதங்களின் வகைகள், மற்றும் பல்வேறு ஆன்மீகத் தகவல்கள் இடம் பெற்றுள்ளன. மலிவுப் பதிப்பு ரூபா 100/- எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.




தொடர்புகளுக்கு:

வி.ரி.வேலாயுதம்,

5அ, ஜனதா மாவத்தை,

கல்கிசை.

## அறநெறி அமுதம்

கொழும்பு, வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை வெளியீடாக *அறநெறி அமுதம்* என்னும் காலாண்டு இதழ் தொடர்ச்சியாக வெளியிடப்பட்டு வருகின்றது. இவ்விதழில் அற நெறிப் பாடசாலை மாணவர்களுக்கு பயனளிக்கத்தக்க சமயக் கட்டுரைகள், கதைகள், தகவல்கள் என் பன இடம்பெற்றுள்ளன. அன்பளிப்புப் பிரதி ரூபா 10/- எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.




தொடர்புகளுக்கு:

பொறுப்பாளர்

இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை,

இல. 40, இராமகிருஷ்ணா வீதி,

கொழும்பு 06.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஞானச் சுடர்

சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டு பேரவையின் வெளியீடாக *ஞானச் சுடர் 2012* தை மாத வெளியீடு வெளியிடப்பட்டுள்ளது. சமயப் பெரியார்கள் பலரது ஆன்மீகக் கட்டுரைகள் இவ்விதழில் இடம்பெற்றுள்ளன. அன்பளிப்புப் பிரதி ரூபா 30/- எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.




தொடர்புகளுக்கு:

தலைவர் / செயலாளர்,

சந்நிதியான் ஆச்சிரமம்,

தொண்டமனாறு,

யாழ்ப்பாணம்.

## பஞ்சபுராணத் தோத்திரத் திரட்டு

லேக்ஹவுஸ் இந்து மன்றத்தின் மூலம் *பஞ்சபுராணத் தோத்திரத் திரட்டு* எனும் நூல் ஒன்று அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூலில் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம், திருப்புகழ், விநாயகர் அகவல், சகலகலாவல்லி மாலை ஆகிய திருமுறைப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இந்நூல் ரூபா 100/- என விலையிடப்பட்டுள்ளது.




தொடர்புகளுக்கு:

தலைவர்,

இந்து மன்றம்,

லேக்ஹவுஸ்,

கொழும்பு 01.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோயிலில் தேங்காய் உடைப்பது ஏன்?

கோயில்களில் பெரும்பாலும் இறைவனுக்கு தேங்காய் உடைப்பது வழக்கம். ஏன் தேங்காய் உடைக்கிறோம்? இதில் என்ன தத்துவம் இருக்கிறது என்ற விபரம் நம்மில் பலருக்கு தெரியாது. ஏதோ சுவாமிக்கு அர்ச்சனை பண்ணினோம், தரிசனம் செய்தோம் என்றவாறே இதை நாம் தொன்றுதொட்டு செய்து வருகிறோம். அதைப் பற்றி ஒரு சிறிய தத்துவ தகவல். தேங்காய் உடைப்பதில ஒரு பெரிய உண்மை மறைந்து இருக்கிறது. தேங்காயின் மேல் கடுமையான ஓடும் அதனுள் மென்மையான பருப்புமாகிய காய்ப்பகுதியும் அதனுள் நீரும் உள்ளது.

உருண்டையான புற ஓடு பிரபஞ்சத்தை ஒத்து இருக்கிறது. இரண்டு கோள வடிவம் உடையது. இது உலக மாயையைக் குறிப்பது ஆகும். உள்ளே உள்ள வெண்ணிறமான பகுதி பரமாத்மாவை குறிக்கும். இளநீர் அதனால் விளையும் பரமானந்த அமிர்தத்தை ஒத்து இருக்கின்றது. ஜீவாத்மா மாயையினால் பரமாத்மாவை உணராமல் பரமானந்த பிராப்தியையும் பெறாமல் நிற்கின்றது. அதுபோல் வெள்ளை பகுதியையும், நீரையும் காண முடியாமல் ஓடு மறை(க்)கின்றது.

ஈசுவர சந்நிதியில் மாயையை அகற்றி தேஜோமய சுவரூபத்தை காட்டி அவர் அருளால் பரமானந்த பேரமுதத்தை நுகரச் செய்யும் செயலையே இது காட்டுகிறது. இவ்வளவு உட்கருத்து இருப்பதால் தான் தேங்காயை இறைவழிபாட்டில் முக்கிய பொருளாக வைத்து நம் முன்னோர்கள் வழிபட்டு வந்துள்ளனர் என்கிற உண்மையை நாம் உணர வேண்டும்.



- துன்பத்திலிருந்து விடுதலை பெறப் பிரார்த்தனை செய்யாதே. ஆனால், துன்பத்தைச் சகிப்பதற்குந் தாங்குவதற்குஞ் சக்தி வேண்டுமென்று பிரார்த்தனை செய்.
- எந்த உயிர்க்குச் செய்யும் குரூரமும் ஈசனுக்குச் செய்யப்பட்டதேயாகும். ஏனெனில் ஈசன் எல்லா உயிர்களிலும் வசிக்கிறார்.
- ஒருவனுடைய கஷ்டத்திற்கோ துன்பத்திற்கோ மற்றொருவன் காரணம் அல்ல. ஏனெனில் ஒவ்வொருவனும் தன்னுடைய வினையின் பலன்களையே அனுபவிக்கிறான்.
- எதிலும் மிதமாயிரு. மிதமிஞ்சுதல் எப்பொழுதும் ஆபத்தானது.
- உள்ளத்தையே ஆலயமாகக் கொண்டு பரமனை வழுத்துவாய். மற்ற இடத்தில் தேட வேண்டாம்.
- ஒவ்வொரு மனிதனுந் தேடும் உண்மையான நிலையான சந்தோஷம் உலகப் பொருள்களில் இல்லை. அந்த ஆனந்தத்தை உனது நெஞ்சினுள்ளே இருக்கும் ஆத்மனைத் தியானிப்பதால் அடைவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்னிரு ஜோதிர்லிங்கங்கள்

இறைவன் எந்த உருவமும் இல்லாத அரூபமானவன் என்பதை உணர்த்துவதே லிங்க வழிபாட்டின் தத்துவம். எந்த உருவமும் இல்லாத அமைப்பு அல்லவா லிங்கம்?

அப்படி அமையப்பெற்ற லிங்கங்களில் மிகச் சிறப்பானவை சுயம்புலிங்கங்கள். அவைகள் தானாக பூமியில் எழுந்து இறையருளை உணர்த்துபவை. அந்தச் சுயம்பு லிங்கங்களுள் உன்னதப் பெருமை பெற்றவை ஜோதிர் லிங்கங்கள். சிவபெருமான் ஜோதி வடிவாகக் காட்சியளித்து எழுந்தருளிய தலங் களே ஜோதிர்லிங்கத் தலங்கள் ஆகும்.

பாரதம் முழுவதிலும் பன்னிரெண்டு ஜோதிர்லிங்கங்கள் அமைந்துள்ளன. அவை:

## 1. சோமநாதபுரம்: (குஜராத்)

தட்சப்பிரஜாபதியின் இருபத்தேழு பெண்களையும் மணந்த சோமன், ரோஹிணி பேரில் மட்டுமே அதிக பாசம் வைத்ததால், மாமனின் சாபத்துக்கு ஆளாகிறான். சாபவிமோசனம் பெற சிவனை அவன் துதித்து, அவருடைய திருக்காட்சி பெற்ற தலம், சோமநாதபுரம். இங்குள்ள ஜோதிர்லிங்கத்தைத் தரிசித்து வந்தாலேயே அனைத்துப் பாவங்களும் விலகும் என்பது ஐதீகம்.

## 2. விஸ்வநாதம்: (காசி)

சிவபெருமான் ஆதியில் ஜோதி சொரூபமாக தோன்றிய ஜோதிர்லிங்க தலம் இதுதான் என்பர். 'இந்த லிங்கத்தை யாரும் தொழக்கூடாது' என்று ஓர் வேற்றுமத அரசன் கட்டளையிட்டு தடைசெய்து லிங்கத் தையே மூடி வைக்கச் செய்தான். அதைத் தொடர்ந்து மழை இல்லாமல் கடும் பஞ்சம் ஏற்பட்டது. அப் போது நாராயணபட்டர் என்ற இந்துமத சீலர், 'இறைவனின் ஜோதிர்லிங்கத்தை வழிபாட்டுக்குத் திறந் தால் மழை பெய்யும்' என்றார். குறிப்பிட்ட காலத்துக்குள் பெய்ய வேண்டும் என்ற நிபந்தனை விதித்து, லிங்க வழிபாட்டுக்கு அனுமதி தர முன்வந்தான் அரசன். அதன்படியே மழை வந்தது. இந்த அற்புதம் நிகழ்ந்தது கி.பி.1569 இல்.

## 3. இராமேஸ்வரம்: (தமிழ்நாடு)

இராமேஸ்வரத்தில் அமைந்துள்ள ஜோதிர்லிங்கம் காசியிலிருந்து ஆஞ்சநேயரால் கொண்டு வரப் பட்டது. பிராமணனாகிய இராவணனைக் கொன்றதால் விளையும் பிரம்மஹத்தி தோஷத்தைப் போக்க, ஸ்ரீராமபிரான் ராமேஸ்வரத்தில் சிவ பூஜை செய்தார். அதற்காக காசிக்குச் சென்று, சிவபெருமானிட மிருந்தே ஒரு ஜோதிர்லிங்கத்தைப் பெற்று வர அனுமனை ஏவினார். அனுமன் அதைப் பெற்றுவரத் தாமதமாகி விட்டது. இதற்கிடையில் சீதாபிராட்டி மணலால் அமைத்த லிங்கத்தை வைத்து ராமபிரான் பூஜையை நிகழ்த்திவிட்டார். ஆயினும், அனுமன் கொணர்ந்த லிங்கத்தையும் அங்கேயே பிரதிஷ்டை செய்ததோடு, இராமேஸ்வரத்துக்கு வருபவர்கள், அனுமன் கொணர்ந்த ஜோதிர்லிங்கத்தை முதலில் தொழுதுவிட்டுத் தான், தான் வழிபட்ட லிங்கத்தை தொழவேண்டும் என்ற நியதியை நெறிப்படுத்தி னார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 4. மகாகாளேஸ்வரர்: (உஜ்ஜயினி) மத்திய பிரதேசம்

ஒருமுறை 'தூறன்' என்ற அசுரன் வேதங்களுக்கும் அறச் சீலர்களுக்கும் பகையாய்த் தோன்றி 'உஜ் ஜயினி' நகரை அழிக்க முயன்றபோது, அவனை சம்ஹரிக்கும்படி 'அவதப்ரியா' என்ற மறையவர் தன் புத்திரர்களுடன் யாகம் செய்து சிவனை வேண்டினார். ஒரு புற்றிலிருந்து சிவன் ஜோதியாய்த் தோன்றி அசுரனை சம்ஹரித்து, காட்சியளித்த ஜோதிர்லிங்கத் தலம் இது.

### 5. ஓங்காரேஸ்வரர்: மத்திய பிரதேசம்

இது உஜ்ஜயினியிலிருந்து சுமார் 150 கி.மீ. தொலைவிலுள்ள ஜோதிர்லிங்கம். 'தாமே உயர்ந்த மலை' என்று ஒருமுறை விந்திய பர்வதம் கர்வமுற்றதாகவும், அந்தக் கர்வத்துக்குப் பரிகாரமாக சிவபெருமா னைப் பூஜித்ததாகவும், அவர் ஜோதிர்லிங்கமாகத் தோன்றி அருள்பாலித்ததாகவும் கூறப்படுகிறது.

### 6. கேதார்நாத்: இமயமலை அடிவாரம் (உத்தரப் பிரதேசம்)

ஜோதிர்லிங்கங்களிலேயே மிகப் பெரியது கேதார்நாத் லிங்கம் தான். மகாவிஷ்ணுவின் அம்சமான நர, நாராயணர்கள் ஹிமாலயச்சாரலில் இருந்து சிவபூஜை செய்ததாகவும், அவர்கள் முன் சிவபெரு மான் ஜோதிர்லிங்கமாகத் தோன்றியதாகவும் வரலாறு.

### 7. திரயம்பகேஸ்வரர்: (நாசிக் அருகே உள்ள தலம்)

ஒருமுறை சிவபெருமானே பிரமனின் சாபத்துக்குள்ளாகி பூலோகத்திற்கு ஜோதியாக எழுந்தருளிய தலம் இது. கர்ப்பக்கிரகத்திலுள்ள நீரின் மத்தியில் இந்தச் சுயம்புலிங்கம் அமைந்துள்ளது.

### 8. ஸ்ரீசைலம் மல்லிகார்ஜுனர்: (ஆந்திரா)

பெருந்துன்பம் காரணமாக காட்டில் மறைந்து வாழ்ந்த சந்திரவதி என்ற இளவரசி தான் உய்வு பெற மல்லிகை மலர்களால் அர்ச்சித்த லிங்கம் இது. பசு தாமாக தன் பாலை அர்ச்சித்து உய்வுற்ற வரலாறு இங்கே உண்டு.

### 9. வைத்தியநாத்: (மேற்கு வங்காளம்)

இராவணன் சிவனிடமிருந்தே பெற்ற ஜோதிர்லிங்கம் இது. இலங்கைக்கு அதைக் கொண்டு செல்லும் போது, வழியில் ஓரிடத்தில் வைத்துவிட நேர்ந்தது. அதனால் அங்கேயே லிங்கம் அசையாது அமர்ந் துவிட்டது. அந்த தலத்தில் ஒரு சுவையான செய்தி, சில காலமாக பூசாரிகள் அதைக் கவனிக்காமல் இருந்தார்களாம். ஆனால் ஓர் ஆயர்குலச் சிறுவன் மாத்திரம் தினந்தோறும் அதை தன் கையிலிருக்கும் கழியால் ஓர் அடி அடித்துவிட்டுச் செல்வானாம். அவன் அடித்த அடிகளைப்பட்டு மகிழ்ந்த ஈசன் அவ னுக்குக் காட்சியளித்து, ''தினம் என்னை பூஜை செய்ய மற்றவர்கள் மறந்தாலும், நீ என்னை மறக்காமல் நாள் தவறாது அடித்தாயே! அதுவே சிறந்த பக்தி'' என்று வாழ்த்தி வரமருளினாராம்.

### 10. ஸ்ரீமாசங்கர்: (மகாராஷ்டிரம்)

திரபுராசுரன் என்ற அசுரனை அழிக்க சிவபெருமான் தோன்றிய தலம் இது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11. குஷ்மேஸ்வரர்: (எல்லோரா குகை அருகே உள்ள தலம்)

சுதேஹா, சுதர்மா என்ற இரு சகோதரிகள். மூத்தவளான சுதேஹாவுக்கு குழந்தைப்பேறு இல்லாததால் அவள் கணவன் இளையவளான சுதர்மாவையும் திருமணம் செய்துகொண்டான். இளையவளுக்கு குழந்தை பிறந்தது. அதை மூத்தவளால் சகிக்க முடியவில்லை.

ஒருநாள் இளையவளின் குழந்தையைக் கொன்று விட்டாள். இது சிவபூஜையிலிருந்த சுதர்மாவுக்குத் தெரியாது. நதிக்கரைக்கு அவள் வந்தபோது, அசரீரியாக அவளுடைய இறந்துபோன மகனின் குரல் கேட்டது: ''அம்மா நான் கொல்லப்பட்டு மறுபிறவியும் எடுத்துவிட்டேன்'' என்றான். அதைக் கேட்டு தாய் பதறவில்லை. துக்கம் - மகிழ்ச்சி எந்த உணர்ச்சியும் பாதிக்காத நிலையில் சிவபக்தியில் திளைத்திருந்தாள். அந்த அபூர்வ பக்திக்கு நெகிழ்ந்து இறைவன் காட்சியளித்தது இந்த ஜோதிர்லிங்கத் தலத்தில்தான்.

## 12. நாகேஷ்வரர்: (துவாரகை) மகாராஷ்டிரம்

தாருகா என்ற கொடியவனால் வதைத்து சிறையிடப்பட்ட சுப்ரியா என்னும் பக்திமானைக் காக்க, சிறையில் சிவன் காட்சியளித்த ஜோதிர்லிங்கத் தலம் இது.

## ஒரு ஞானியின் ஆற்றல்

ஒரு ஞானி எப்படி இருப்பார் என்பதற்கான ஒரு கதை. ஞானியொருவனின் புகழ் நாடெங்கும் பரவிக் கொண்டிருந்தது. அவரிடம் யார் என்ன கேள்வியைக் கேட்டாலும், எத்தனை கேள்விகளை கேட்டாலும் தெளிவாகவும், சுருக்கமாகவும், அறிவுபூர்வமாகவும் விடை சொல்லக்கூடிய ஆற்றல் பெற்றவர். அதே நேரத்தில் ஆழ்கடலின் மையத்தை போல் சலனமில்லாமல் அடக்கத்துடன் இயல்பாய் இருப்பவர்.

அவர் ஓர் ஊருக்கு வந்தார். அந்த ஊரில் உள்ள இளைஞர்கள் அவரது ஆற்றலை நன்கு உணர்ந்தவர்கள். இளமையின் துடிப்பு அவர்களுக்குள் ஊஞ்சலாடிக் கொண்டிருந்தது. அந்த துடிப்பில் அவரை எப்படியாவது மட்டம் தட்ட வேண்டும் என்று சிலர் நினைத்தனர்.

கேள்விகளாலேயே அந்த வேள்வியைத் தொடங்குவது என்று முடிவு செய்தனர்.

சுருக்கமாகப் பதில் சொல்ல முடியாதபடி ஒரு கேள்வியைக் கேட்டு அவரை அவமானப்படுத்தத் திட்டமிட்டனர். பல நாட்கள் நன்றாகச் சிந்தித்து ஒரே ஒரு கேள்வியைத் தேர்வு செய்தனர். இளமையின் மிடுக்கோடும், ஆணவத்தின் மமதையோடும் அவரிடம் சென்றனர். இளைஞர்களைப் பார்த்தார் ஞானி...

அன்புடன் அவர்களை வரவேற்று ''உங்களுக்கு ஏதேனும் பிரச்சினையா?'' என்று கேட்டார்.

''எங்களுக்கு ஒன்றும் பிரச்சினை இல்லை. உங்களுக்குத்தான் இன்று பிரச்சினை ஆரம்பமாகப் போகிறது'' என்றனர்.

''அப்படியா... சரி சொல்லுங்கள்'' என்றார்.

''வேறொன்றுமில்லை, நாங்கள் கேட்கும் ஒரே ஒரு கேள்விக்கு சுருக்கமாக நீங்கள் உடனே பதில் சொல்லியாக வேண்டும்'' என்றனர்.

''சரி கேளுங்கள் முயற்சி செய்து பார்க்கிறேன்''.

''இந்த உலகில் எந்தெந்த உயிரினங்கள் குட்டி போடுகின்றன? எந்தெந்த உயிரினங்கள் முட்டை இடுகின்றன?''

இதுதான் கேள்வி. இந்தக் கேள்விக்கு நிச்சயமாக அவரால் பதில் சொல்ல முடியாது. ஒரு வேளை சொன்னாலும் நீண்ட பட்டியலே போட வேண்டியிருக்கும். நாம் கேட்டபடி சுருக்கமாகச் சொல்ல முடியாது. என்றெல்லாம் அவர்கள் மனக்கோட்டை கட்டியிருந்தனர். மகானோ இரண்டே இரண்டு வரிகளில் இதற்குப் பொருத்தமாய், பொறுமையாய் விடை சொன்னார்.

''காதுகள் வெளியே உள்ள உயிரினங்கள் எல்லாம் குட்டி போடும். காதுகள் வெளியே தெரியாத உயிரினங்கள் எல்லாம் முட்டை இடும்''

ஞானியார் சொன்னதும் இளைஞர்கள் சிந்தனைச் சிறகுகளை விரித்தனர். அடடா! இதுதானே உண்மை. இயற்கையின் படைப்பு இப்படித்தானே உள்ளது. பிறப்பின் ரகசியத்தை இரண்டே வரிகளில் சொன்ன அந்த ஞானியின் அறிவாற்றலைக் கண்டு அவர்கள் அதிர்ந்து போயினர். அவமானப்படுத்த நினைத்தவர்கள் அவமானத்திற்குள்ளானார்கள். கடைசியில் அவரிடமே அடைக்கலமாயினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோகி

துக்கம் என்பது தன்னைத் தொடாமல் எவன் ஒருத்தன் இருக்கிறானோ அவனே யோகி. பாபம், அதாவது மனசின் அசுத்தம் தான், துக்கத்துக்குக் காரணம். மனசில் உள்ள அசுத்தங்கள் எல்லாம் நீங்கினால், அது தானாகவே பரமாத்மாவின் பக்கம் திரும்பிவிடும். ஒழுங்கினாலும் கட்டுப்பாட்டினாலும் தான் மனசில் அசுத்தங்களை அகற்ற முடியும். இந்தச் சரீரக் கூட்டிலிருந்து ஆத்மா பிரிந்து போவதற்கு முன்பு, சரியான கல்வியின் மூலமும், அப்பியாசத்தின் மூலமும், கட்டுப்பட்டு ஒழுங்காக வாழ்ந்து, அசுத்தங்களைப் போக்கிக் கொண்டுவிட வேண்டும். அப்படிச் செய்து ஜெயித்தால், கடைசியில் தேக வியோகமே பரமாத்மாவுடன் பிரியாமல் சேர்ந்துவிடுகிற யோகமாகிவிடும்.

யோகிக்கு அடையாளம் என்ன? பரமாத்மாவைச் சேர்ந்துவிட்ட அவனது மனசு, வேறு எதையுமே சேர்த்துக் கொள்ள நினைக்காது.

மனசு அதற்கப்புறம் ஓடவே முடியக்கூடாது. அப்படி ஓடாமல் ஆகிவிட்டால்தான், அதற்கப்புறம் இப்போது இந்த மனசினால் நமக்கு உண்டாகியிருக்கிற இத்தனை தொந்தரவுகளும் தொலைந்து போகும். அந்த நிலையைப் பெறுவதற்கு எதைச் சேர வேண்டும்? மனசு எதிலிருந்து உற்பத்தியாயிற்றோ அதைத் தான் சேர வேண்டும். மனசு அதன் மூலத்தில் சேர்ந்துவிட்டால், அங்கே அப்படியே கரைந்து போய்விடும். அப்புறம் ஓடாது. அதுவே சகல தொந்தரவுகளிலிருந்தும் விடுபட்ட நிலை.

நதி இருக்கிறது. அதன் மூலம் - உண்டான இடம் - என்ன? சமுத்திரம். சமுத்திர ஜலம்தான் ஆவியாகப் போய் வேறொரு இடத்திலிருந்து நதியாக ரூபம் எடுக்கிறது. அந்த ஆறு ஓடாத ஓட்டமில்லை. இப்படி ஓடி ஓடிக் கடைசியில் தன் மூலமான சமுத்திரத்தில் வந்து விழுகிறது. அப்புறம் அதற்குத் தனி ரூபம் உண்டா? ஓட்டம் உண்டா? ஒன்றும் இல்லை. இப்படி நதிகளுக்கெல்லாம் மூலமாக இருந்து, முடிவில் இவற்றைத் தன்னிலேயே சேர்த்துக் கொள்கிற சமுத்திரம் மாதிரி, நம் மனசுகளை எல்லாம் முடிவான சேர்க்கையில், யோகத்தில் தன்னோடு கரைத்துக் கொள்கிற ஒன்று இருக்கிறதா என்றால் இருக்கிறது. சமாதி நிலையில் ஞானிகள், யோகிகள் தங்கள் தனி மனசைக் கரைத்துவிட்டு வெளிப் பிரக்ஞையே இல்லாமல் இருக்கும்போதே, இந்த வஸ்துவிடம்தான் சேர்ந்திருக்கிறார்கள். சமாதி நிலைக்கு அப்புறம் ஒரு யோகி அந்த வஸ்துவை விட்டுவிட்ட மாதிரி நமக்குத் தோன்றினால்கூட உண்மையில் இது நீங்காத சேர்க்கைதான். உள்ளூர அவருக்கு அந்தச் சேர்க்கையின் அனுபவமே தான் இருந்து கொண்டிருக்கும். அதனால்தான் அவர் வெளிப் பிரக்ஞையோடு இருக்கிற மாதிரி நமக்குத் தோன்றுகிற போது கூட, அதை அடையவேண்டும், இதை அடையவேண்டும் என்கிற ஆசை எதுவுமே அவருக்கு இல்லை. ஏதாவது ஒன்று தனக்கு வேண்டுமென்று கொஞ்சம் கொஞ்சம் ஒருத்தனுக்குத் தோன்றிவிட்டால்கூட அவன் யோகியில்லை, அவன் ஸ்வாமியைச் சேரவில்லை என்று தான் அர்த்தம்.

யோகியின் அடையாளத்தை வேறு விதமாகவும் சொல்லலாம். அதாவது அவனுடைய சித்தம் பரமாத்மாவிடமே நிலைத்து விட்டது என்றால், அதற்கப்புறம் எந்தப் பெரிய துக்கம் வந்தாலும் அது துளிக்கூட ஆடக்கூடாது, அசையக்கூடாது. இப்படியில்லாமல், சித்தம் துளித்துளி சலித்துவிட்டால்கூட அவன் பரமாத்மாவை அடையவில்லை என்றே அர்த்தம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோகிக்கு அநேக துக்கம் வரும்; அதாவது ஊர் உலகத்துக்கெல்லாம் அது துக்கமாகத் தோன்றும். ஆனால் அவனுக்குத் துக்கம் லவலேசமும் தெரியாது. பட்ட கட்டை மாதிரி இருப்பான். பட்ட கட்டை என்பது கூடச் சரியில்லை. அது உணர்ச்சியே இல்லாத நிலை அல்லவா? யோகி ஒருத்தன் தான் பூரணப் பிரக்ஞையோடு இருக்கிறவன். அவன் சதானந்தமாக இருக்கிறவன். அது வேண்டும், இது வேண்டும் என்பதேயில்லாமல் சதா ஆனந்தமாக உட்கார்ந்து கொண்டிருந்துவிட்டால் அதுதான் யோகம்.

அவனுக்கு ஸ்வபாவமாகவே கருணை மாத்திரம் சுரந்து கொண்டிருக்கும். யாரிடத்திலும் கோபம், வெறுப்பு வராது. இன்னொரு பிராணிக்குத் தன்னால் இம்மியும் ஹிம்சை வரக்கூடாது என்கிற எண்ணம் மட்டும் இருக்கும். வெளி உலகத்தின் பார்வைக்கு அவன் என்னென்ன காரியம் செய்தாலும், அதிலெல் லாம் அவனுக்குத் 'தான் செய்கிறோம்' என்ற அகங்கார எண்ணமே இராது. சொந்தப் பற்றே இல்லா மல், பரம காருண்யம் மட்டுமே அவனுடைய காரியங்களில் இருக்கும். சில சமயங்களில் வெளியிலே பார்க்கிற காரியம் நமக்குக் கடுமையாக இருந்தாலும்கூட, உள்ளுக்குள்ளே அதுவும் பரம காருண்யம் தவிர வேறாக இராது. மகா யோகியான பரமேசுவரன் இப்படித்தான் சம்ஹாரம் செய்கிறார். நமக்கு அது கொடுமையாகத் தெரியலாம். ஆனால் ஒவ்வொரு ஜீவனும் - எத்தனை பாப ஜீவனாயிருந்தாலும் - சிறிய காலமாவது கர்ம கதியிலிருந்து விடுதலை அடைந்து தன்னிடம் இலயித்திருப்பதற்கே அவர் சம்ஹாரம் செய்கிறார்.

தினமும் நமக்குத் தூக்கத்தைக் கொடுத்து அந்த வேளையில் சுகதுக்கங்களிலிருந்து நமக்கு விடுதலை தருகிற மாதிரி, இந்தச் சரீரம் விழுந்த பின்னும் கொஞ்சகாலம் சிரம பரிகாரம் தருகிறார். தினம் தூங்கி விட்டு மறுநாள் விழித்துக் கொண்டு பழையபடி நல்லது கெட்டதுகளில் விழுகிற மாதிரி, இச் சரீரம் போய்ச் சிரம பரிகாரம் ஆனபின், இன்னொரு சரீரத்தில் விழித்துக் கொள்கிறோம். இந்த அலைச்சல் - புனரபி ஜனனம், புனரபி மரணம் - கூடாது. இந்தச் சரீரம் போனால் இன்னொரு முறை சரீரம் வரக்கூ டாது. அப்படிச் செய்துகொள்ள வேண்டும். கட்டுப்பாடு, ஒழுங்கு, பரம கருணை, தபஸ் பூஜை, யக்ஞம் தானம் எல்லாம் அதற்குத்தான். குழந்தையாக இருக்கிற காலத்திலிருந்தே இவற்றில் எல்லாம் பழக்க வேண்டும். அப்படிப் பழக்கினால்தான், கோடானுகோடி ஜனங்களை இந்த மாதிரி படிப்படியாக உயர்த் துவதற்கு முயன்றால்தான், எங்கேயாகிலும் ஒரு யோகி, ஒரு ஞானியாவது பூரணமாக உண்டாவார். அப்படி ஒருத்தர் உண்டாவதுதான் இத்தனை மனுஷ்ய சிருஷ்டிக்கும் பலன்.

**- 'தெய்வத்தின் குரல்' நூலிலிருந்து**

**(காஞ்சிப்பெரியவர் சங்கராச்சாரிய சுவாமிகள்)**

**பொறாமை கொள்ள வேண்டாம். அவதூறு சொல்ல வேண்டாம். பொய் பேச வேண்டாம். ஏமாற்றப் பழக வேண்டாம். வேஷத்தை வளர்க்க வேண்டாம். நீ சந்தோஷமாகவும் ஆனந்தமாகவும் அமைதி யாகவும் எப்பொழுதும் இருப்பாய்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விக்கிரக வழிபாட்டின் பலன்கள்

பக்தி செய்ய வேண்டுமானால், பகவானைத் தெரிந்துகொண்டுதான் செய்தாச வேண்டும். பகவான் இந்தக் கோவிலுக்குள் இருக்கிறார். கர்ப்பக்கிரகத்துக்குள் தான் இருக்கிறார். விக்கிர கத்தில் தான் இருக்கிறார். அந்த இடத்தைத் தவிர வேறு எங்கும் இல்லை. இப்படி நினைத்துதான் முதலில் பக்தி வந்தாக வேண்டும்.

வினைகள் தீர வேண்டுமானால் செய்கிற காரியங்கள் செம்மையாக நடைபெற வேண்டு மானால் விநாயக மூர்த்தத்தை வணங்கு.

அழகும் வீரமும் ஞானமும் வேண்டுமானால் முருகப் பெருமானை வணங்கு.

இவ்வுலகத்தில் எல்லாவிதமான இன்பங்க ளுக்கும் அடைய உன் மனம் விரும்பினால் திரு மாலை வணங்கு.

எல்லாச் சக்திகளையும் பெற்று தீரனாக தைரி யவானாக விளங்க வேண்டுமானால் அம்பி கையை வணங்கு.

கல்வியைப் பெற விரும்புகிறாயா? சரஸ்வதி யைப் போற்றி வணங்கு.

செல்வத்தை விரும்பி யாசிக்கின்றாயா? திரு மகளை வணங்கிப் போற்று.

முக்தியை விரும்பி நிற்கின்றாயா? சிவபெரு மானைத் துதித்து அருள் பெறு.

இறைவனைத் தாயின் வடிவத்தில் பார்க்க விரும்புகிறவர்கள் சாக்தம் என்றும், குழந்தை உருவில் பார்க்க நினைப்பவர்கள் குமரனை அப்படி வழிபடும் கௌமாரத்தையும் பின்பற்று கிறார்கள். எந்த விதத்தில் வழிபடும்போது நமக் குப் பலன் கிடைக்கிறதோ அந்தவித வழிபாடே உயர்ந்தது.

பரம்பொருள் எங்கும் நிறைந்ததாகவும் அறிந் ததாகவும் எல்லாம் வல்லதாகவும் விளங்குகின் றது. அதனை அப்படியே அனுபவிக்க சாதாரண மனிதர்களால் ஆகாது. எனவே பல்வேறு மூர்த் தங்களாக அறிந்து அனுபவித்தவர்கள் நமக்கு உருவாக்கித் தந்திருக்கிறார்கள்.

உதாரணமாக மின்சாரம் இருக்கிறது. எதை யும் செய்யவல்ல ஆற்றல் அதற்கு இருக்கிறது. விளக்கில் ஒளியைத் தருகிறது. ஒலிபெருக்கியில் ஒலியை நெடுந் தொலைவு கொண்டு செல்லும் ஆற்றல் உடையதாகிறது. விசிறிகளில் காற்றைத் தருகிறது. பெரிய இயந்திரம் முதல் சிறிய இயந் திரம் வரை செயல்பட வைக்கிறது.

மின்சாரத்தைப் போல பரம்பொருளும் அத னால் செயல்படும் கருவிகளைப் போல விக்கி ரகங்களும் நமது பெரியோர்கள் கண்டு அறிந்து தேர்ந்து அனுபவித்து நமக்கு அறிமுகப்படுத்தி வைத்திருக்கின்றார்கள்.

இவ்வாறு நமது பக்திக்கு வழியமைத்து இஷ்ட சித்தியைப் பூர்த்தி செய்து கொள்ள மூர்த் தங்களும் ஆலயங்களும் அமைந்திருக்கிறார் கள்.

அரசாங்கம் ஒன்றேயாயினும் செயல்பட பல் வேறு துறைகள் இருப்பதுபோல் நமக்கு அனுக் கிரகம் செய்யவல்ல மூர்த்தங்களை வழிகாட்டியி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருக்கிறார்கள்.

பெரியவர்கள் அமைத்துக் காட்டிய ஆலய மூர்த்தங்களை, அவர்கள் ஆகம விதிகளின் படி அமைத்த விக்கிரகங்களை சாஸ்திரங்களை அனுசரித்து வழிபட்டால்தான் பலன்கிடைக்கும்.

ஆலயம் நமது உயிருக்கு உயிர். ஆலயம் காப்போம் என்று சொல்லும்போது, நமது பண்பாடும், கலாசாரமும் வகுப்பு ஒற்றுமையும், தேச நலனும், கட்டுப்பாடும், மொழி வளர்ச்சியும் பிறருக்கு உதவும் மேலான குணங்களும் நம்மிடையே வளரும். அனைவரும் ஆலய நலனில் அக்கறை கொண்டு மேலான நலன்களை அடைய பிரார்த்திக்கின்றேன்.

**(ஸ்ரீ ஜெயேந்திர சுவாமிகள்**

**'தெய்வ வாக்கு' நூலிலிருந்து)**

## யாழ்ப்பாணத்துச் சுவாமியின் புகழ்

கோவிந்த சாமி புகழ் சிறிது சொன்னேன்,
குவலயத்தின் விழி போன்ற **யாழ்ப்பாணத்தான்,**
தேவி பதம் மறவாத தீர ஞானி,
சிதம்பரத்து, நடராஜ மூர்த்தி யாவான்
பாவியரைக் கரை ஏற்றும், ஞானத் தோணி,
பரம பத வாயில் எனும், பார்வை யாளன்,
காவி வளர் தடங்களிலே மீன்கள் பாயும்
கழனிகள் சூழ், புதுவையிலே, அவனைக் கண்டேன்

தங்கத்தாற் பதுமை செய்தும் இரத லிங்கம்
சமைத்தும், அவற்றினில், ஈசன் தாளைப் போற்றும்,
துங்கமுறு பக்தர் பலர், புவி மீதுள்ளார்,
தோழரே! எந் நாளும், எனக்குப் பார் மேல்,
மங்களஞ் சேர், திரு விழியால், அருள்ளைப் பெய்யும்,
வானவர் கோன், யாழ்ப்பாணத் தீசன் தன்னைச்,
சங்கரன் என்று, எப்போதும், முன்னே கொண்டு,
சரணடைந்தால், அது கண்டீர், சர்வ சித்தி


**மகாகவி சுப்பிரமணிய பாரதியார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனம் கெட்டால் மாநிலம் கெடும்

ஸ்ரீமத் சுவாமி செங்காதரானந்தா



பிரமாண்டமான இப்பிரபஞ்ச நியமங்களைப் பற்றிய ஒரு சாமானிய அறிவு உணர்வுக்காவது இம்மண்ணுலக மனிதன் ஒரு கணமேனும் தலைவணங்கி நிற்பானேயானால் இவ் வையகம் பெருஞ் சுகமடைய வழியுண்டு.

மனிதன் இப்பூவுலகில் வாழ்ந்தும் அதன் உண்மைகளை உள்ளபடி அறியாமல் ஒன்றை இன்னொன்றாகவே கருதி வாழ்வதில் ஏமாற்றங்கள் பல சம்பவிக்கின்றன.

உண்மையைக் கிரகிக்க முடியாத மனம், மாறி மாறி வரும் ஏமாற்றங்களால் தன்னம்பிக்கை இழந்து வாழுந் திறமையுமற்று இறுதியில் மன வெறுப்பால் தரந்தாழ்ந்த குணமுடையதாகவும் மாறி விடுகின்றது.

**மனித சுபாவம்:**

மனிதருடைய அந்தரங்க உணர்வு தனது சக ஜீவிகளிடம் அன்பும் சமரச பாவனையும் உடையதாயிருந்த போதிலும், சொந்த விருப்பு வெறுப்புகளுக்குப் பங்கம் விளையும் பொழுது மனித சுபாவம் கொடிய விலங்குகளை விட மூர்க்க குணமுடையதாகின்றது.

நேற்று வரையிலும் இனிமையாகவும் நன்மையாகவும் போற்றிப் புகழ்ந்து வந்தவைகள் எல்லாம் கசப்பும் பகைமையும் உடையவைகளாகவே மாறிவிடுகின்றன. பகைமை கொண்ட மனமும் பாகனில்லாத யானையும் ஒன்றே. இங்ஙனம் சுயநலத்தால் வெறுப்பும் பகைமையும் கொண்டு சீறும் மனம் நல்ல குணங்களெல்லாமிழந்து மத யானை போன்று தனக்கும் சமுதாயத்திற்கும் பெருங்கேடுகளை விளைவிக்கின்றது.

இப்படியான கரவுக் குணத்திலிருந்தெழுந்த விளைவுகள் தனி மனிதனிலிருந்து உலக ரீதியில் தோன்றிக் கொண்டிருக்கும் சகல தொல்லைகளுக்கும் மூல காரணம்.

**மிக அரிது:**

காலம் போகப் போகச் சிறிதேனும் உள்ளக் களிப்புடன் அமைதி நிறைந்த ஆத்மார்த்தமான ஒருவரைக் காண்பதே அரிதாகிவிட்டது.

மனிதன் தன் தன் உணர்வுகளை, செயல்பாடுகளை உன்னிப்பாகக் கவனிப்பதில்லை. மனம் தோற்றுவிக்கும் விருப்பு வெறுப்புகளின் பலாபலன்களை அலசி ஆராய்வதுமில்லை.

கெடுபிடிக்குரிய யதார்த்த காரணங்கள் வேறெங்கேயோ இருக்கையில் விருப்பு வெறுப்புகளை மாத்திரம் முன்வைத்துப் பிரச்சினைகளைத் தீர்க்கப் பார்த்தால் மேலும் புதிய பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும்.

மனிதன் மனச் சாட்சியை நேர் கோட்டில் வைத்துக் காரிய காரணங்களைப் பார்த்தறியப் பழக வேண்டும்.

**மனித மனம்:**

பால் அதிக சத்து நிறைந்த உணவாயினும் கெட்டால் நச்சுத் தன்மையடைகின்றது.

மனத்தால் வாழுகின்றவன் மனிதன். மனிதருடைய மனம் கெட்டுவிட்டால் இவ்வையகம் முழுவதும் கெடும்.

அடிமனம் விஷக் கலப்பில்லாத அமிர்த துல்லியமானது. பேராசையும் அகங்காரமும் மன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மென்ற பொதிக்குள் விஷத்தை ஊற்றிவிடுகின்றது.

அக்கினியின் ஒளியால் கவரப்பட்டு அதிலேயே மாண்டு மடிகின்ற விட்டில் பூச்சி போன்று உலக வாசனையால் தடிப்பேறிய அகங்காரமும் பேராசையும் அதற்குரியவரைச் சுட்டெரிக்கின்றன.

**உலகின் நிலை:**

கேடுகள் பூமியில் இருந்தும் வானத்தில் இருந்தும் உருக்கொள்வதில்லை. அவைகள் மனித மனதில் இருந்து சிருஷ்டிக்கப்படுகின்றன.

பேராசையும் சுயநலமும் கேடுகளை வளர்த்தெடுக்கின்றன.

இவ்விரு நீச குணங்களுடைய பராமரிப்பில் வளர்ந்து வருகின்ற உலகம் சர்வ நாசத்திற்கு ஊர்ந்து செல்லக்கூடும்.

மிலேச்ச குணங்கள் கண்களைத் திசைமாறிப் பார்ப்பதற்குப் பழக்கி வைத்திருக்கின்றபடியால் அது நேரான மார்க்கத்தைப் பார்ப்பதற்குரிய ஒளியை இழந்து வருகின்றது.

ஜனங்களுடைய நல்ல சுபாவந்தான் உலக ஷேமத்தின் ஆதார பீஜம். இதை ஒவ்வொருவரும் திடமாகவே கருத்தில் ஊன்ற வேண்டும்.

மனிதர் களங்கமற்ற நற்குண சீலராய் வாழ்ந்தால் கலகமும் கலக்கமும் இருக்க மாட்டா. யதார்த்தம் இவ்வாறிருக்கையில் வெவ்வேறு மார்க்கங்களில் யோக சேமங்களைத் தேடப் பார்ப்பது அர்த்தமற்றதாகி விடுகின்றது.

ஆத்மீக சிட்ஷணங்கள் சமய ஆசார அனுஷ்டானங்கள் எல்லாம் மனக் கசடுகளை உருக்கி மனிதர்களை நல்ல சுபாவ சுத்தியுடையவர்களாக்குவதற்கு உரிய உபாயங்களாகும்.

மனிதர் சர்வ சக்திகளையும் உபயோகித்து நற்குணங்களை விருத்தி செய்ய வேண்டும்.

**உபத்திரவங்கள்:**

துர்க்குணம் உடையவர்கள் வாழுகின்ற இடங்களில் பெரும் உபத்திரவங்கள் நிகழ்கின்றன. இதுதான் இன்றைய உலகநிலை.

மென்மேலும் வனக்காடுகள் வளர்ந்து கொண்டே போனால் மனிதனுக்கும் விஷக்கிருமிகளுக்கும் அதிக வித்தியாசமில்லாதுவிடும்.

நமது உணர்வு மாற்றத்திற்காகக் காலம் காத்து நிற்பதில்லை. இனியாவது மனிதர்கள், சமுதாயம் போய்க் கொண்டிருக்கும் பாதையைப் பற்றிச் சரியான அறிவுடையவர்களாகாவிட்டால் எதிர்காலம் அமங்கலகரமான பல சம்பவங்களால் பாதிக்கப்படும்.

மனிதருடைய துர்க்குணங்களே சாசுவதமான சுகத்திற்கும் சுதந்திரமான வளர்ச்சிக்கும் இடையூறாயிருக்கின்றன.

உலக சமுதாயத்தின் இரு பெருங் கண்களாகிய அரச தர்மமும், ஆத்மீக தர்மமும் அந்தரங்க சுத்தியுடன் சரியான இலட்சியத்தில் செயல்பட்டால் உயர்ந்த சீலமுடைய ஒரு மனித சமுதாயத்தை உருவாக்குவது சுலபமானதாகும்.

மனிதர் துர்க்குணங்களிருந்து முக்தராகுவதுதான் உலக சமாதானத்திற்கும் மாயக் கலப்பில்லாத சாந்த மதுரமான வாழ்க்கைக்கும் ஏக மார்க்கம்.

**('ஞானமண்டலம்' எனும் நூலிலிருந்து)**

*கடவுள் உன்னை எந்த நிலையில் வைக்கிறாரோ அதில் திருப்தி அடை, உனக்கு நல்லது எது என்று அவருக்குத் தெரியும். முணுமுணுக்காதே; எப்பொழுதும் அவரை வாழ்த்து.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வீரத்துறவி சுவாமி விவேகானந்தரின்

# 150ஆவது பிறந்ததின ஆண்டுவிழா

வீரத்துறவி சுவாமி விவேகானந்தரின் 150 ஆவது பிறந்ததின ஆண்டு விழா 2012 / 2013 ஆண்டு காலப்பகுதியில் உலகெங்கும் மிகவும் உணர்வுபூர்வமாகக் கொண்டாடப்படுகின்றது.

உலகளாவிய ரீதியில், மாநாடுகள், கருத்தரங்குகள், இளைஞர்களுக்கான செயற்திட்டங்கள், ஆன்மீக ஒன்றுகூடல்கள் என்பன இக்காலப்பகுதியில் இடம்பெறவுள்ளன. இராமகிருஷ்ண, விவேகானந்த இயக்கங்கள், மன்றங்கள் இச்செயற்பாடுகளை முன்னெடுக்கின்றன. இலங்கையிலும் இச்செயற்பாடுகள் நடைபெறவுள்ளன.

சுவாமி விவேகானந்தரை நினைவுகூரும் வகையில் அவரது சிந்தனைகளின் தொகுப்பு இங்கே வெளியிடப்படுகின்றது.



✸ எப்போதும் வெற்றி பெறுவது அன்பு மட்டுமே. அன்புடன் ஒப்பிடும் போது நூல்களும், அறிவும், யோகமும், தியானமும், ஞான ஒளியும் ஆகிய யாவுமே அதற்கு ஈடாகாது.

✸ வரம்பு கடந்த ஆற்றல் கொண்ட இறைவனை தூய்மையான மனதோடு பற்றிக் கொள்ளுங்கள். அவரைச் சார்ந்து நின்று வாழுங்கள். உங்களை வெல்ல யாராலும் முடியாது.

✸ கொடுக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு அன்பையும், உதவியையும், சேவையையும் மற்றவர்களுக்கு கொடுத்துப் பழகுங்கள். இதற்காக எதையும் எதிர்பார்க்கவேண்டாம்.

✸ எதைப் பிறருக்கு கொடுக்கிறோமோ அது திரும்பவும் ஆயிரம் மடங்காக நம்மிடமே திரும்பிவிடும். ஆனால், இப்போதே அதைப்பற்றிச் சிந்திக்காதீர்கள். நீங்கள் செய்யவேண்டியது எவ்வித எதிர்பார்ப்பும் இல்லாமல் பிறருக்குக் கொடுப்பது மட்டுமே.

✸ கைகள் இருப்பது பிறருக்கு உதவி செய்யத் தான். பட்டினியாய்க் கிடந்தாலும் கடைசிப் பருக்கையையும் பிறருக்கு கொடுப்பது தான் நல்லது. கொடுப்பவன் முழுமை பெற்று முடிவில் கடவுளாகிறான்.

✸ ஒருவருக்கு உதவி செய்ய எண்ணி, யாருடைய கை முன்னே நீளுகிறதோ, அவனே மக்களில் சிறந்தவன்.

✸ பரந்த இந்த உலகத்தில், கிராமம் கிராமமாகச் சென்று மனிதகுலத்திற்கு நன்மை செய்வதைக் கடமையாகக் கொள்ளுங்கள். மற்றவர்களின் நன்மைக்காக நரகத்திற்குக் கூடச் செல்ல தயாராகுங்கள்.

✸ தேவையில்லாத விஷயங்களைப் பற்றி அலட்டிக் கொள்வதில் ஆற்றலைச் சிதற விடாமல் அமைதியுடனும், ஆண்மையுடனும் ஆக்கபூர்வமான கடமைகளில் அக்கறை காட்டுங்கள்.

✸ சேவை செய்யும் வாய்ப்பு எல்லாருக்கும் கிடைப்பதில்லை. தன் குழந்தைகளில் யாராவது ஒருவருக்கு உதவி செய்யும் வாய்ப்பை கடவுள் அளித்தால் அதன் மூலம் நீங்கள் பாக்கியம் பெற்றவராகிறீர்கள் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✸ நல்லவர்கள் உலகில் பெரும் தியாகங்களைச் செய்கிறார்கள். அதன் விளைவாக வரும் நன்மை களை மனிதகுலம் பெற்று அனுபவிக்கிறது. இந்த உண்மையை உலக வரலாறு எங்கும் காணமுடியும்.

✸ பாமரர்களுக்கு கல்வியையும், மனதிற்கு தைரியம் மிக்க சொற்களையும் வழங்குவது தர்மங்களில் சிறந்த தர்மமாகும். ஒருவன் கல்வி பெறுவதால் அவனுடைய குடும்பமே முன்னேற்றப்பாதையில் அடி யெடுத்து வைக்கும்.

✸ உனது விதியைப் படைப்பவன் நீயே என்பதைப் புரிந்து கொள். உனக்குத் தேவையான எல்லா வலிமையும் உதவியும் உனக்குள்ளே குடி கொண்டு இருக்கின்றன.

✸ யாருடைய நம்பிக்கையையும் கலைக்க முயலாதீர்கள். முடியுமானால் அந்த மனிதனுக்கு அவன் கொண்ட நம்பிக்கைக்கும் மேலாக இன்னொன்றைக் கொடுங்கள்.

✸ நாம் நினைக்கும் ஒவ்வொரு எண்ணமும், நாம் செய்யும் ஒவ்வொரு செயலும் குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு சூட்சுமத்தன்மையை அடைகிறது.

✸ மனிதன் தன் வாழ்க்கையைத் தானே உருவாக்கிக் கொள்கிறான். தனக்குத் தானே அமைத்துக் கொள்ளும் விதிகளைத் தவிர, வேறு எதற்கும் மனிதன் கட்டுப்பட்டவன் அல்ல.

✸ எழுந்து தைரியமாக நின்றால், உன் விதியை நீயே நிர்ணயிப்பாய்.

✸ கிடைக்கும் பயனை அளந்து பார்க்கும் நண்பர், அன்பைக் கொள்ளாமல் பொருளை மட்டும் கொள்ளும் விலைமகள் போன்றவர் ஆவார். அவருடைய நட்பினை ஏற்றுக் கொள்ளாதீர்கள்.

✸ நம்மைப் பற்றிச் சிந்திக்காமல, மற்றவர்களுடைய நன்மையைக் குறித்துச் சிறிதளவு நினைத்தால் கூடப் போதுமானது. இந்தச் சிந்தனை சிங்கத்திற்குச் சமமான ஆற்றலை நமது இதயத்திற்குப் படிப்படியாகத் தரும்.

✸ அறிவு, உள்ளம் ஆகிய இரண்டில் எதைப் பின் பற்றுவது என்ற போராட்டம் எழும் போது உள்ளம் சொல்வதையே நீங்கள் பின்பற்றுங்கள். அறிவால் அடையமுடியாத உயர்ந்த இடத்திற்கு நல்லமன நிலை ஒருவனை அழைத்துச் செல்லும்.

✸ உங்களிடமே நீங்கள் நம்பிக்கை கொள்ளுங்கள். ஒருகாலத்தில் நீங்கள் வேதகாலத்தைச் சேர்ந்த ரிஷிகளாக இருந்தீர்கள். இப்போது நீங்கள் வேறுவித வடிவம் தாங்கி வந்திருக்கிறீர்கள்.

✸ மற்றவர்களுக்காக நீங்கள் மேற்கொள்ளும் மிகக் குறைந்த அளவு உழைப்பும் நமக்குள்ளே இருக்கும் சக்தியைத் தட்டி எழுப்புகிறது.

✸ ஒரு எஜமானைப் போல உங்கள் செயல்களைச் செய்யுங்கள். அடிமையைப் போல உங்கள் செயல் பாடுகள் அமையக்கூடாது. முழுமையான சுதந்திர உணர்வும், அன்பும் கொண்டு உங்கள் கடமைகளில் பணியாற்றுங்கள்.

✸ கர்மயோகம் என்றால் என்ன என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். ஒருவருக்கு அவர் யார், எப்படிப்பட்டவர் என்ற சிந்தனையோ கேள்வியோ இல்லாமல் கூட அவருக்கு உங்களால் முடிந்த உதவி களைச் செய்வது தான்.

✸ சிங்கங்களே! எழுந்து வாருங்கள். வீணான மயக்கங்களை உதறித்தள்ளுங்கள். நீங்கள் சுதந்திர மானவர்கள். அழியாத பேரின்பத்தின் பங்குதாரர் கள்.

✸ பலவீனத்திற்கான பரிகாரம், அந்த பலவீனத் திற்கான காரணத்தை சிந்திப்பதல்ல. மாறாக வலிமையைக் குறித்து சிந்திப்பது தான்.

✸ உலகம் வேண்டுவது ஒழுக்கமே. கொழுந்து விட்டெரியும் அன்பும், தன்னலமில்லாத பண்பும் யாரிடம் இருக்கிறதோ அவரை இம்மண்ணுலகமே வேண்டி நிற்கிறது.

✸ எழுந்து நில்லுங்கள். தைரியமாயிருங்கள். பல முடையவராகுங்கள். உங்கள் மீதே முழுப்பொறுப்பு களையும் சுமந்து கொண்டு வாழப்பழகுங்கள்.

✸ சிரத்தை தான் நமக்குத் தேவை. மனிதனுக்கு மனிதன் வேறுபடுவதற்குக் காரணமே இந்த சிரத்தை தான். சிரத்தை உடையவன் வெற்றி பெறுகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரத்தை இல்லாதவன் தாழ்ந்தவனாகிறான்.

✱ ஒரு குறிக்கோளை எடுத்துக் கொள்ளுங்கள். அதையே கனவு காணுங்கள். அதனை நோக்கியே வாழ்க்கை நடத்துங்கள். அந்த கருத்தை உயிர்மூச்சாகக் கொண்டு செயல்படுங்கள். வெற்றி பெறுவீர்கள்.

✱ வீர இளைஞர்களே! முன்னேறிச் செல்லுங்கள். கட்டுண்டு கிடக்கச் செய்யும் தடைகளை வெட்டி வீழ்த்தவும், எளியவர்களின் துயரச்சுமையை குறைக்கவும், இருண்ட உள்ளங்களில் ஒளியேற்றவும் முன்னேறிச் செல்லுங்கள்.

✱ நம்புங்கள். இறைவனின் கட்டளை வந்துவிட்டது. பாமரமக்களும், எளியவர்களும் நலம் பெற வேண்டும் உழைத்திடுங்கள். இறைவனின் கையில் நீங்கள் ஒருகருவி என்ற உணர்வுடன் பிறருக்கு சேவை செய்யுங்கள்.

✱ உங்களிடம் நேர்மை இருக்கிறதா? பொதுநலத்துடன் சேவை செய்கிறீர்களா? அன்பு இருக்கிறதா? இம்மூன்றும் இருந்தால் பயமே வாழ்வில் தேவையில்லை. மரணம் கூட உங்களை நெருங்க முடியாது.

✱ இறைநம்பிக்கையோடு செயல்படுங்கள். அவரையே எப்போதும் சார்ந்திருங்கள். உங்களை எந்தச் சக்தியும் எதிர்த்து நிற்க முடியாது.

✱ வலிமையின்மையே துன்பத்திற்கான ஒரே காரணம். பொய்யும், திருட்டும், கொலையும், மற்ற அனைத்து பாவச் செயல்களும் மனபலவீனத்தாலே தோன்றுகின்றன.

✱ உலகவாழ்வுக்குள் வந்துவிட்டீர்கள். அதற்கு அறிகுறியாக ஏதேனும் அடையாளத்தினை விட்டுச் செல்லுங்கள். எழுந்திருங்கள், உழையுங்கள். இல்லாவிட்டால் நாம் பூமியில் பிறந்ததில் ஒருபயனும் இல்லை.

✱ அன்பின் மூலமாகச் செய்யப்படும் ஒவ்வொரு செயலும் ஆனந்தத்தைக் கொண்டு வந்தே தீரும். அமைதியையும் ஆசியையும் கொண்டுவராத அன்புச்செயல்கள் உலகத்தில் எதுவுமே இல்லை.

✱ கடவுள் பற்றில்லாமல் இருக்கிறார். ஏனென்றால் உலகம், உயிர்கள், அண்டசராசரங்கள் அனைத்திடமும் அவர் அன்பு செலுத்துகிறார்.

✱ இயற்கையை வெல்வதற்கே மனிதன் பிறந்திருக்கிறான். அதற்குப் பணிந்து போவதற்காக அல்ல.

✱ இங்கேயே, இப்போதே நிறைநிலையை அடைய முடியாதென்றால் வேறெந்த மறுவாழ்க்கையிலும் அடைவோம் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

✱ பாவம், புண்ணியம் என்று எதுவும் இல்லை. நம்மிடம் உள்ளதெல்லாம் அறியாமை மட்டுமே. கடவுளை உணர்வதால் அறியாமை விலகுகிறது.

✱ முதலில் நீ செல்ல வேண்டிய பாதையைக் கண்டுபிடி. அதன் பிறகு செய்யவேண்டியது எதுவும் இல்லை. கைகளைக் குவித்தபடியே கடவுளைச் சரணடைந்துவிடு. பாதையின் போக்கிலேயே லட்சியத்தை அடைந்து விடுவாய்.

✱ ஓய்வு ஒழிவில்லாமல் வேலை செய்து கொண்டே இரு. ஆனால், செய்யும் வேலையில் நீ கட்டுப்பட்டு விடாதே. அதற்குள் சிக்கிக் கொள்ளாதே. இதுதான் கீதையின் வழி.

✱ எழுந்திருங்கள், எழுந்திருங்கள். நீண்ட இரவு கழிந்துவிட்டது. பகல்பொழுது நெருங்கிக் கொண்டிருக்கிறது. என் அன்பான இளைஞர்களே! உங்களுக்கு வேண்டுவதெல்லாம் உற்சாகம்... உற்சாகம் மட்டுமே.

✱ சுயநலம் அற்றவர்களாக இருங்கள். ஒருவர் இல்லாதிருக்கும் போது அவரைப் பற்றி, பிறர் தூற்றுவதை ஒருபோதும் கேட்டுக்கொண்டிருக்காதீர்கள்.

✱ மற்றவர்களுடைய நன்மையைக் குறித்துச் சிறிதளவு நினைப்பது கூட சிங்கத்திற்குச் சமமான ஆற்றலை நமக்கு தந்துவிடும்.

✱ வாழ்க்கை என்னும் போர்க்களத்தில், அஞ்சாது எதிர்த்து நிற்கும் வெற்றி வீரன் ஒருவனுடைய மனநிலையே இப்போது நமக்கு தேவை.

✱ மரணம் என்பது நமக்கு உறுதியாக ஒருநாள் வந்தே தீரும். அதற்குள் சிறிதளவாவது பிறருக்கு பயன்பட்டு அழிந்து போவது நல்லது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனந்தக் கூத்தரின் திருவுருவத்தில் அமைந்துள்ள தத்துவங்கள்

### திருக்கைகள்

கூத்த பிரானுக்குப் பொதுவாக நான்கு கைகளும் சிறப்பாக 8,10,16 கைகளும் இருக்கும். இக்கைகள் திசைகளைக் குறிக்கின்றன. எங்கும் பரந்து இருக்கின்ற ஆகாயம் இறைவனின் திருமேனி என சாஸ்திரங்கள் கூறுகின்றன. எனவே, கைகள் திசைகளைக் குறிப்பது பொருத்தமானதே.

### உடுக்கை

கூத்தபிரான் வலது பின்கையில் உடுக்கை ஏந்தியுள்ளார். இது படைத்தலைக் (சிருஷ்டி) குறிக்கும்.

### தீச்சுடர்

பெருமான் தமது இடது பின்கையில் தீச்சுடரை ஏந்தியுள்ளார். இது அழித்தலைக் (சம்ஹாரம்) குறிக்கும்.

### அபயகரம்

இறைவனின் முன் வலது கை அபய முத்திரை உடையது. இது 'பயப்படாதே' என்பதைக் குறிக்கும் காத்தலைக் (ஸ்திதி) குறிக்கும் இது.

### ஊன்றிய திருவடி

முயலகன் மீது ஊன்றிய திருவடி மறைத்தல் (திரோபவம்) தொழிலைக் குறிக்கும்.



### தூக்கிய திருவடி

எல்லா உயிர்களுக்கும் இன்னருள் புரியும் அருளல் (அனுக்கிரகம்) தொழிலைக் குறிப்பதாகும். இத்திருவடியையே 'குஞ்சிதபாதம்' என்பர்.

### முயலகன்

இறைவனின் ஊன்றிய திருவடியின் கீழ் இருப்பவன். 'அபஸ்மாரன்' என்பது மற்றொரு பெயர். கருநிறமும் விகாரமான தோற்றமும் உடையவன். இவன் கையில் பாம்பு ஒன்று இருக்கும். ஆணவத்தைக் குறிக்கும் அடையாளமே முயலகன்.

### வீசிய கை (கஜ ஹஸ்தம்)

தூக்கிய திருவடியைச் சுட்டிக் காட்டும் இக்கை. இறைவனின் திருவடி அல்லாது உயிர்களுக்கு வேறு பற்று இல்லை என்பதை உணர்த்த தூக்கிய திருவடியைக் காட்டுகிறது.

### சடை முடி

இது ஞானத்தின் அடையாளமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நிலா

சடையிலுள்ள பிறை இறைவனின் பேரறிவைக் குறிக்கும்.

### கங்கை

பெருகி வந்த கங்கையை ஓர் மயிர்க்காலில் இறைவன் கட்டினான். இது அவனது அளவில்லாத ஆற்றலைக் குறிப்பதாகும்.

### ஊமத்த மலர்

இறைவனின் விருப்பு வெறுப்பற்ற தன்மையைக் குறிக்கும்.

### தீருநீறு

பராசக்தியின் வடிவமாகும்.

### திருநீலகண்டம்

இறைவனின் அருளாற்றலைக் குறிக்கும்.

### முக்கண்

சூரியன், சந்திரன், தீ ஆகிய மூன்றுமே முக்கண்கள்.

### பூணூல்

இது பிரணவ காயத்திரியைக் குறிக்கும்.

### திருவாசி

இது ஓங்காரத்தைக் குறிக்கும். திருவாசியின் மீதிருக்கும் சுடர்கள் 51 அட்சரங்களைக் குறிக்கும்.

இப்படி தத்துவமே வடிவமாக விளங்கும் கூத்த பிரானை அத்தத்துவக் கருத்துகளை அறிந்து நாம் வழிபட்டால் மக்கட் செல்வமும் ஞானச் செல்வமும் முக்தியும் நிச்சயமாகக் கிடைக்கும்.

## மனதின் பக்குவம்



முற்பிறவியில் புண்ணிய வினைகளைச் செய்தவன் வாழ்வில் இன்பத்தை நுகர்ந்து மகிழ்கிறான். பாவவினைகளைச் செய்தவன் துன்பத்தில் உழல்கிறான்.

விதிப்படி தான் வாழ்க்கை நடக்கிறது. வாழ்க்கை என்பது திட்டமிட்ட கணக்கு போலத்தான். ஐந்தொகை என்று சொல்வார்களே அதைப் போன்றது. இதை மாற்றினால் கணக்கு சரிப்பட்டுவராது. ஆண்டவனும் தான் ஏற்படுத்திய நியதியை யாருக்காகவும் எப்போதும் மாற்ற முன்வருவதில்லை.

விதிப்படி வகுத்திருக்கும் வாழ்க்கையில் நன்மைகளைப் பெற்றால் ஆர்ப்பரிக்காமல் அமைதியோடு இருப்பதற்காகவும் தீமை வந்தால் ஒரேயடியாகத் துவண்டு போய் வருந்தாமலும் இன்பத்தையும் துன்பத்தையும் சமமாகக் காணும் மன நிலையை ஆன்மிகம் நமக்குக் கற்றுத் தருகிறது.

பக்தியால் பக்குவம் பெற்றவர்கள் மனதில் சுகமோ, கவலையோ பாதிப்பை ஏற்படுத்துவதில்லை. அதோடு வரவிருக்கும் அடுத்தடுத்த பிறவிகளுக்கு வினைச் சுமைகளைச் சேர்த்துக்கொள்ளாமல் காப்பாற்றுவதற்கும் பக்தி துணையாக அமைகிறது. உண்மையான பக்தி தீமைகளில் இருந்து மனிதனைக் காப்பாற்றுகிறது.

**-ஸ்ரீ ரமண மஹரிஷி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயாதீன மனம்

காட்டில் சூரப்பற்றை என்று கூறப்படும் ஒரு இன முட்செடி இருக்கின்றது.

இது வளைந்த கூரிய சிறு முட்களையுடைய தாய் அடர்த்தியாக வளர்ந்திருக்கும் ஒருவகை முட்புதர்.

இந்த முட்செடிகளில் காய்த்துப் பழுக்கும் சிறு பழங்கள் வெளவாலுக்கு மிக உருசியான உணவு.

வெளவால் இதைத் தின்பதற்காகப் பறந்து வந்து இச்செடியில் தொங்கும் வெளவாலின் தோற் செட்டைகள் இம்மரத்தில் கொழுவிக் கொள்ளும்.

கொழுவிக் கொள்ளும் பகுதியை விடுவிக்க முயற்சிக்கும் பொழுது ஏனைய பகுதிகளும் முள்ளில் கொழுவிக் கொள்கின்றன. இதனால் வெளவால் தன்னை விடுவிக்க முடியாமல் அதிலே கிடந்து மாண்டு மடிகின்றது.

இதேபோன்று மனிதரும் விஷய சுகங்களென்ற சிறு பழங்களை உண்பதற்காக ஜென்ம வாசனைகளென்ற முட்புதரிற் சிக்கி மீள முடியாமல் அந்தரப்படுகின்றனர்.

விவேகத்தை உபயோகித்துச் சிரத்தையோடும் பொறுமையோடும் இதிலிருந்து மீள முயற்சிக்காதவர்களுடைய ஜீவன் மீண்டும் இதனையே பற்றிக்கொண்டு வீணாக மாய்கின்றது.

**மழை**

மழை உயிரினங்களை உயிர்ப்பிக்கின்றது. இருள் மயமான முகில்கள் இல்லாமல் மழையாகிய அமிர்தம் வர்ஷிப்பதில்லை.

அதேபோன்று சுக துக்கங்களாகிய கருக்கூட்டல் இல்லாமல் ஈஸ்வர அனுபூதி என்ற தேவாமிர்தம் மனிதரில் பொழிவதில்லை.

ஆகாய விமானங்கள் ஏறி இறங்கும் விமானத்தளம் போன்று ஜீவாத்மாக்கள் ஏறி இறங்கிக் கொண்டிருக்கும் ஒரு பெருந்தளந்தான் இந்தக் கர்ம பூமி.

ஜீவிகளுடைய பிரயாண இலட்சியத்தை அடைவதற்கு இதைத் தவிர பிறிதோரிடமில்லை. எனவே முட்புதர் நிறைந்ததாயினும் மண்டலங்களிற் சிறந்த மண்டலமாகிய இந்தக் கர்ம பூமியில் மனிதராய்ப் பிறந்தவர்கள் எல்லாம் பெரும் புண்ணியசாலிகள்.

நாம் காலூன்றி நிற்கும் இத்தளத்தை வெறுக்காமலும் அதேசமயம் இதிலிருந்து முட்புதரிற் கொழுவிக் கொள்ளாமலும் ஜீவிதத்தைச் சம்பூர்ணமாக்க வேண்டும்.

**-ஸ்ரீமத் சுவாமி கெங்காதரானந்தா**

தனக்கு எதைச் செய்து கொள்ள விரும்பமாட்டோமோ அதைப் பிறருக்குச் செய்யாமலிருப்பதே தர்மத்தின் சாரமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மந்திரங்களின் மகத்துவம்

மனிதனுக்கு உள்ள ஆறாம் அறிவைக் கொண்டு அடுத்த நிலையை அறிய உணர்வதில் ஒரு சீரான சப்த அதிர்வுகளுக்கு பெரும் பங்கு உண்டு. இவை மந்திரங்கள் என்று அழைக்கப்ப டுகின்றன.

வேதத்தில் மந்திர சாஸ்திரம் முக்கிய பங்கு வகிக்கிறது. நடைமுறையில் மந்திரசாஸ்திரம் என்றால் தீய விளைவுகளுக்குப் பயன்படும் விஷயமாக எண்ணுகிறார்கள். மந்திர சாஸ்தி ரத்தை சரியான முறையில் பயன்படுத்தினால் சிறந்த நிலையை அடையலாம். யோக சாஸ்தி ரம் பரமாத்மாவை அடையும் பல வழிகளைக் கூறுகிறது.

ஹத, ஞான, கர்ம, பக்தி மற்றும் மந்திர யோகம் எனும் ஐந்து பாதைகளைக் கொண்டு ஆன்ம தரிசனம் அடைய முடியும் என யோக சாஸ்திரம் கூறுகிறது. யோக சாஸ்திரத்தில் மந்திர யோகம் ஓர் அங்கம் என்பதில் மூலம் மந்திர ச ாஸ்திரத்தின் உயர்வை உணரலாம்.

அறியாமை கொண்ட மனதுடன் ஆராய்ந்தால் ஓர் எளிய வார்த்தைக்கு என்ன சக்தி இருக்க முடி யும் என எண்ணத் தோன்றும் உண்மையில் மந்தி ரத்தின் வார்த்தையைக் காட்டிலும் அதை பயன் படுத்தும் விதம் (ப்ரயோகம்) மற்றும் பயிற்சியே (சாதனா) முக்கியம்.

மந்திர உச்சாடனம் செய்யும் பொழுது நமது உடலில் உள்ள 72,000 நாடிகளில் சலனம் ஏற் படுகிறது. பிரபஞ்ச ஆற்றலில் சில விளைவு களை ஏற்படுத்தும் இந்த சலனம் முடிவில் நாம் அடைய வேண்டிய இலக்கை அடைகிறது. மந் திர ஜெபம் மனதை ஒருமுகப்படுத்துகிறது. மன தில் ஏற்படும் சலனத்தை தெளிவாக்குகிறது.

கலங்கலான நீர் இருக்கும் பாத்திரத்தில், ஒரு நாணயத்தை இடும்பொழுது அனைத்து தூசும் அந்த நாணயம் இருக்கும் இடத்தை அடையும். நீர் தெளிவடையும். எப்பொழுதும் சலனம் கொண்ட நீர் போன்ற மனதில், மந்திர ஜெபம் செய்யும் பொழுது எண்ண அலைகள் மந்திரத்து டன் அடங்கி மனம் தெளிவடையும்.

மனம் ஒடுங்கியதும், மனதின் மூலத்தைக் காண்பதே மந்திர ஜெபத்தின் நோக்கம். அதனால் தான் யோக முறையில் ஜெபயோகம் முக்கியத் துவம் பெறுகிறது. ஜெபம் என்றால் தொடர்ந்து உச்சரிப்பது எனப் பொருள்படும்.

ஜெபம் மற்றும் அஜெபம் என இரு தன்மைக ளைக் கொண்டது, மந்திரஜெபம். தூய்மையான மனதுடன் மந்திரத்தை உச்சரிப்பது மந்திர ஜெபம் எனப்படும். தொடர்ந்து மந்திர ஜெபம் செய்த பின்பு வேறு நடவடிக்கைகள் செய்யும் பொழுது நம்மை அறியாமல் மனம் ஜெபம் செய்துகொண் டிருக்கும். இது அஜெபம். அதாவது சமஸ்கிருத சொல்லான அஜெபம் ஜெபிக்காத ஜெபம் என மொழி பெயர்க்கலாம்.

உலகில் உள்ள அனைத்து மதங்களிலும் மந் திர ஜெபம் உண்டு. எனவே மந்திர ஜெபம் சம யங்கள் கடந்த இறைநிலை காட்டும் கருவி என லாம்.

**உனது இதயத் தோட்டத்திலே அன்பெனும் அல்லியையும் தூய்மையென்னும் ரோஜாவையும் தைரி யமென்ற சண்பகத்தையும் அடக்கம் என்ற மந்தாரையையுங் கருணை என்னும் மல்லிகையையும் பயிர் செய்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org